AHARAM
அகரம்

எண்: 13 எழுத்து: 04 ஏப்ரல் 2019 | ரஜப் - ஷஃபான் 1440

# ஓங்கி வளரும் மூங்கில் மரம்

## "எனது ஹீரோ எனது தந்தையே"

இளம் சாதனையாளர் மாவனல்லை

## பஷாம் முர்தஸா




50/=

மாதாந்த சிறுவர் சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களது பிள்ளையின் ரமழானை
## அர்த்தமுள்ளதாக
## மாற்றிக்கொள்ள வெளிவருகிறது...




**ரய்யான்** Rayyan பயிற்சிப் புத்தகம்

துஆக்கள் | குர்ஆன் மனனம் | தொழுகைப் பயிற்சி | நோன்புப் பயிற்சி
பண்பாடுசார் அம்சங்கள் | போட்டிகள் |
பெறுமதியான பரிசில்கள்

தொடர்புகளுக்கு : 077-3950475

1. எனது டயரியின் மறுபக்கம் (பகுதி 1) - **Dr.** ரயீஸ் முஸ்தபா - 250 ரூபாய்
2. எனது டயரியின் மறுபக்கம் (பகுதி 2) - **Dr.** ரயீஸ் முஸ்தபா - 350 ரூபாய்
3. **The Diary of a Pediatrician (English - Part 1) - Dr. Rayes Musthafa - 400 Rupees**
4. இறைவிசுவாசத்தின் கண்ணோட்டத்தில் அல் அக்ஸா - அஷ்ஷெய்க் அஷ்கர் அரூஸ் நளீமி - 300 ரூபாய்
5. ஸூரத்து ல் கஹ்ப் : தப்ஸீர் - உஸ்தாத் ஹஜ்ஜுல் அக்பர் - 250 ரூபாய்
6. பத்வா - உஸ்தாத் ஹஜ்ஜுல் அக்பர் - 150 ரூபாய்
7. உம்மஹாத்துல் முஃமினீன் - **Z.A.M.** பவாஸ் - 250 ரூபாய்
8. மல்லிகை இதயங்கள் - ஷாரா - 250 ரூபாய்
9. பீனிக்ஸ் பறவைகள் - ஷாரா - 300 ரூபாய்
10. தாய் மகளுக்கு தோழி - வஸீரா ஹஸன் - 200 ரூபாய்

Book Avenue

## இதோ, புத்தகங்கள் உங்கள் வீடு தேடி...

மேலுள்ள புத்தகங்களில் உங்களுக்கு தேவையான புத்தகங்களின் இலக்கங்களையும், உங்கள் பெயர் முகவரியையும் 0772 729495 இலக்கத்திற்கு **SMS Whatsapp** செய்யுங்கள். புத்தகங்கள் வீட்டுக்கே அனுப்பி வைக்கப்படும்!

**Book Avenue - வாசிப்பை வாழ வைக்கும் தளம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

AHARAM
அகரம்

எண்: 13 - ஏப்ரல் : 2019 - எழுத்து: 04




பிரதம ஆசிரியர்
எம். றிஸ்வி ஸுபைர் M.Ed

ஆலோசனைக் குழு
அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)
எம்.எச். எம். ஹஸன் M.Ed
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி,
தேசிய கல்வி நிறுவகம்)
ஏ.ஆர்.எம். ஜிப்ரி BEd, MEd
அன்பு ஜவஹர்ஷா
(ஓய்வு பெற்ற அதிபர்)

துணை ஆசிரியர்
ஸஹீம் கமால் (இர்பானி)

தளக்கோலம்
எம்.ஐ.எம். ஹரீஸ்

தொடர்புகளுக்கு:
அகரம்
77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை
கொழும்பு 00900
தொ.பே : 077 892 7350
பெக்ஸ் : 011 268 6030
E.mail : aharamipc@gmail.com

சந்தா விபரம்
தனிப் பிரதி : 50/=
1 வருட சந்தா : 800/=
6 மாத சந்தா : 400/=

Public Library
Jaffna.

## உங்களுடன் ஆசிரியர்...

### உலக சுகாதார தினம் சொல்லும் செய்தி

உலக சுகாதார நிறுவனத்தின் “சுகாதாரம்” எனும் சொல்லுக்குரிய வரைவிலக்கணமானது பின்வருமாறு கூறப்பட்டிருக்கின்றது: “சுகாதாரம் என்பது வெறுமனே நோயற்று இருத்தல் மட்டுமல்லாது பௌதிக, உள மற்றும் சமூக ரீதியான நல்வாழ்வினை உள்ளடக்கிய ஒரு பூரண நிலையாகும்.” இப்பூரண நிலயினை ஏற்படுத்துவதற்கே உலக சுகாதார தாபனம் ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் 07 ஆம் திகதியை உலக சுகாதார தினமாக பிரகடனப்படுத்தியிருக்கிறது.

ஒவ்வொரு வருடமும் சர்வதேச ரீதயில் நினைவுகூரும் தினங்களில் ஒன்பது தினங்கள் சுகாதாரம் தொடர்பானவை. அதில் ஒன்றாகவே 1948 ஆம் ஆண்டில் இடம்பெற்ற உலக நல்வாழ்வு மன்றத்தின் மாநாட்டில் ஒவ்வோர் ஆண்டும் 1950 இல் இருந்து உலக சுகாதார தினம் கொண்டாடுவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இன்று பல நாடுகளும் தமது நாட்டு மக்கள் ஆரோக்கியமாக வாழ்வதற்கான ஏற்பாடுகளை உருவாக்கி கொடுப்பதற்கு முனைப்புடன் செயற்படுகின்றன. பெரும்பாலான நாடுகள் தமது வரவு செலவு திட்டங்களில் சுகாதாரத் துறைக்கு அதிக செலவீனங்களை செய்து வருகின்றன. காரணம் ஒரு நாட்டின் அழகு, ஆரோக்கியம், வளர்ச்சி, அபிவிருத்தி என்பவற்றின் அத்திவாரமாய் அமைவது அந்நாட்டு மக்களின் சுகாதாரத் துறையாகும்.

இன்று எமது நாடு, மக்களுக்கு சுகாதார நலன்களை இலவசமாக வழங்குகின்றது. எனினும், சுாதாரத்துறை சார்ந்த பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் துரதிஷ்ட நிலையும் காணப்படுகிறது. எடுத்துக்காட்டாக சுகாதார அமைச்சு அண்மையில் வெளியிட்ட அறிக்கையில் இலங்கை சனத்தொகையில் 25 வீதமானோர் நீரிழிவு நோய்க்கு உட்பட்டுள்ளதாகவும், இது 2050 ஆம் ஆண்டாகும்போது 50 வீதமாக அமையும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளதோடு, 15 வீதமான பாடசாலை செல்லும் மாணவர்களும் இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. இந்நிலைக்கு முக்கிய காரணமாக சுகாதார முறையில் எமது உணவு பழக்கவழக்கம் காணப்படாமையும் உடற்பயிற்சி இன்மையும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

எமது குடும்பம், சமூகம், நாடு வளமிக்கதாகவும் ஆரோக்கியமானதாகவும் அமைய வேண்டுமாயின் நாம் மாணவ பருவத்திலிருந்தே சுகாதார பழக்கவழக்கங்களை பேணி எமது வாழ்வை அமைத்துக்கொள்ள வேண்டும்.

சுகாதாரமான முறையில், ஆரோக்கியமாக எமது வாழ்வை அமைத்துக் கொள்வதற்கு ஐந்து அடிப்படைகள் அவசியம் என ஆய்வாளர்கள் அறிமுகப்படுத்தியுள்ளனர்.

வாழ்வில் எல்லா நிலையிலும் சுத்தமாக இருத்தல்

சுத்தமான குடிநீரைப் பருகுதல்

ஆரோக்கியமான உணவை உட்கொள்ளல்

ஒவ்வொரு நாளும் உடற்பயிற்சியில் ஈடுபடல்

அதிகாலையில் விழித்தெழல்

எனவே, எதிர்கால இலக்குகளை சாதனைகளாக அமைத்துக் கொள்வதற்கு எமது வாழ்வை ஆரோக்கியமானதாக அமைத்துக் கொள்வோம்.

இப்படிக்கு
அன்புடன் ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரலாற்றுக் கதை

# ஆசிரியருக்குக் கண்ணியம்

ஹாரூன் ரஷீத் என்ற ஒரு பெரிய அரசர் வாழ்ந்து வந்தார். அவரது ஒரு மகனின் பெயர் மாமூன்.

மாமூன் மிக அளவு கடந்த பாசத்தோடும் செல்லத்தோடும் வளர்க்கப்பட்டான். இதன் விளைவாக மாமூன் மிகவும் குறும்புக்காரனாகி விட்டான். அரண்மனையிலிருந்த எல்லா வேலையாட்களும் அவனது குறும்புத்தனத்திற்கு ஆளாக வேண்டியதாயிற்று. பெரியவர்களைக் கூட அடிக்கத் தொடங்கினான். அவர்கள் யாவரும் அவனது அடியை மௌனமாகப் பொறுத்துக் கொண்டிருந்தார்கள். இதனால் அவன் இன்னும் அதிகமாகக் கெட்டுப் போய்விட்டான். அவன் யாரையும் பொருட்படுத்தாமல் இருந்தான். பயம் என்பதே இல்லை. எப்போது பார்த்தாலும் எதையும் உடைப்பதிலும் தகர்ப்பதிலுமே ஈடுபட்டிருந்தான்.

மாமூன் சற்று பெரியவனானதும் அவனது கல்விக்கென ஓர் ஆசிரியர் அமர்த்தப்பட்டார். ஆசிரியர் பாடம் சொல்லிக் கொடுப்பதற்காக அரண்மனைக்குச் சென்றார். அவர் மாமூனை உரத்த குரலில் கூப்பிட்டார். ஆயினும், அவன் விளையாட்டில் ஈடுபட்டிருந்தான். ஆசிரியரின் குரல் கேட்டு வெளியில் வரவில்லை.

வேலையாளைக் கொண்டு அழைக்கப்பட்டான். ஆனால், மாமூன் அதையும் பொருட்படுத்தவில்லை. ''அவன் எவரது வார்த்தையையும் கேட்பதில்லை. ஆட்களை அடித்து விடுகிறான். என்ன செய்வதென்று வாய்மூடி சகித்துக் கொள்கிறோம்'' என்று வேலையாள் வந்து முறையிட்டான்.

ஆசிரியர் மாமூனின் அறிவீனத்தைப் புரிந்து கொண்டார். எப்படியோ அப்பையனை வெளியில் அழைத்தார். அவன் வந்ததும் பிரம்பினால் அவனுக்கு ஏழு அடிகள் கொடுத்துக் கண்டித்தார். மாமூன் அழுதுவிட்டான். அன்று வரை அவன் யாரிடமும் அடிபட்டதில்லை. ஆசிரியருக்கு மரியாதை செலுத்த வேண்டும் என்பதற்காக அவன் ஒன்றும் சொல்லவில்லை. கண்ணீர் வடித்துவிட்டு சும்மா இருந்து விட்டான்.

இந்த நிலையில் அப்பக்கமாக ஓர் அமைச்சர் வந்தார். மாமூன் மிகவும் மரியாதையோடு அமர்ந்து படித்துக் கொண்டிருந்தான்.

மாமூனைப் பார்த்து ஆசிரியர், ''நீ அமைச்சரிடம் நான் உன்னை அடித்ததைப் பற்றி முறையிடவில்லையா?'' எனக் கேட்டார்.

''அருமை ஆசிரியரே! தாங்கள் எனது நன்மைக்காகவே அடித்தீர்கள். நான் யாரிடத்தில் எதற்காக வேண்டி முறையிடப் போகிறேன்! இவரோ அமைச்சர்தாம். என் தந்தையோ அரசராக இருக்கின்றார். அவர் வருகை தந்தாலும் அல்லது அவர் என்னிடம் கேட்டாலும் அப்பொழுதும் நான் முறையிட மாட்டேன்!'' என மாமூன் பதிலளித்தான்.







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஹதீஸ் பூங்கா

அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக அபூஹுறைரா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ''நிச்சயமாக அல்லாஹ் உங்களின் உடல்களையோ, தோற்றங்களையோ பார்ப்பதில்லை. மாறாக, உங்களின் உள்ளங்களையும் செயல்களையுமே பார்க்கின்றான்.'' (முஸ்லிம்)

## இஹ்லாஸின் முக்கியத்துவம்

ஏ.ஆர்.எம். ஸஜித் (இஸ்லாஹி)

ஒரு மனிதன் தான் செய்கின்ற செயலூடாக அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற வேண்டுமானால் இரண்டு நிபந்தனைகளை கடைப்பிடிக்க வேண்டியது அவசியமாகின்றது. அவைதான் உள்ளத்தில் இஹ்லாஸ் இருத்தல் மற்றது செய்யப்படும் செயல் நற்செயலாக இருத்தல். இதனையே இங்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அல்லாஹ் மனிதனின் உள்ளத்தையும் அவனது செயற்பாடுகளையும் பார்க்கிறான் என்பதன் மூலம் எமக்கு உணர்த்தியிருக்கிறார்கள்.

**இஹ்லாஸ் என்றால்** எந்தவொரு சிறு கலப்புமின்றி அல்லாஹ்வுக்கு மாத்திரம் என்ற தூய்மையான உள்ளத்துடன் நற்செயல்களைப் புரிவதாகும். மனிதனது சொல்லும், செயலும் இஹ்லாஸுடன் அமைந்திருக்க வேண்டும் என்பது இஸ்லாத்தின் அடிப்படைகளில் முக்கியமான ஒரு விடயமாகும்.

உள்ளத்தில் இஹ்லாஸ் மாசுபட்ட நிலையில் காலம் பூராகவும் நற்செயல்கள் புரிந்தாலும் அது அல்லாஹ்விடத்தில் பெறுமதியற்றதாகவே கணிக்கப்படும். அவன் தோற்றத்தால் மிக அழகானவனாக, குலத்தால் உயர்ந்தவனாக, உலக அந்தஸ்தில் உயர்ந்தவனாக இருந்தாலும் சரியே.

ஒருவன் தான் ஒரு நல்லவன் என்பதை மக்களுக்கு காட்ட வேண்டும் என்ற நோக்கில் நல்லமல்கள் செய்து மனிதர்களை ஏமாற்றி விடலாம். எனினும், எம்மைப் படைத்துப் பரிபாலித்துக் கொண்டிருக்கும் அல்லாஹ்வை ஒருபோதும் ஏமாற்றிவிட முடியாது. அல்லாஹ் எம் உள்ளங்களில் உள்ளவற்றை நன்கறிந்தவன்.

**''நிச்சயமாக அவன் உள்ளங்களில் உள்ளவற்றை நன்கறிந்தவனாக உள்ளான்.'' (பாதிர்: 38)**

மேற்படி இரண்டு நிபந்தனைகளில் ஒன்றேனும் விடுபடும்போது அதாவது ஒருவர் இஹ்லாஸ் இன்றி நற்செயல் புரிதல் அல்லது இஹ்லாஸுடன் கெட்ட செயலைச் செய்தல் இவ்விரண்டு நிலைமைகளும் பாதகமான விளைவையே ஏற்படுத்தும்.

இஹ்லாஸ் இல்லாமல் போவதால் மறுமையில் மனிதன் அடையும் இழிநிலை பற்றி மற்றுமொரு தடவை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஒரு நீண்ட ஹதீஸில் அழகாக விளங்கப்படுத்தினார்கள். மறுமையில் அல்லாஹ் விசாரணைக்காக ஒரு ஸஹீத், ஆலிம் மற்றும் கொடைவள்ளல் ஆகியோரை அழைத்து விசாரணை செய்வான். அப்போது முதலாமவர் தாம் அல்லாஹ்வுக்காக போர்க்களத்தில் ஸஹீதாக்கப்பட்டதாகவும், இரண்டாமவர் அல்லாஹ்வுக்காக கல்வியை மற்றவர்களுக்கு கற்றுக் கொடுத்ததாகவும், மூன்றாமவர் அல்லாஹ்வுக்காக தர்மங்கள் செய்ததாகவும் கூறுவர். எனினும், அல்லாஹ், **''நீங்கள் பொய் சொல்கிறீர்கள். உங்கள் உள்ளங்களில் இஹ்லாஸ் இருக்கவில்லை புகழுக்காகவே இவற்றை செய்தீர்கள். அப்புகழை உலகில் பெற்றுக்கொண்டீர்கள்'' எனக் கூறி அவர்களை நரகில் வீசுமாறு மலக்குகளிடம் உத்தரவிடுவான். (முஸ்லிம்)**

இவ்விரு ஹதீஸ்களின் மூலமும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறிய செய்தி யாதெனில், மார்க்கத்தில் மிக உயர்ந்த இடத்தில் வைத்துப் பார்க்கப்படுகின்ற நற்செயலாக அல்லது இபாதத்தாக இருந்தாலும் அது இஹ்லாஸுடன் செய்யப்படும்போதே மறுமையில் அல்லாஹ்விடத்தில் நன்மைகளைப் பெற்றுத் தரும் என்பதாகும்.

எனவே, அல்லாஹ்வுக்கு மாத்திரம் பயந்து தூய இஹ்லாஸுடன் நற்செயல்கள் புரிந்து வாழும்போதே இம்மையிலும் மறுமையிலும் சுபீட்சத்தை அடைந்தவர்களாக மாறலாம் என்பதை உணர்ந்து செயற்படுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்குர்ஆன் கூறும் விலங்குகளின் கதைகள்

தொடர் - 19

"கிஸஸ் அல்ஹைவான் பில் குர்ஆன்)" அல்குர்ஆன் கூறும் விலங்குகளின் கதைகளை மையமாக வைத்து எழுதப்பட்ட நூலின் மொழிபெயர்ப்பை அகரம் வாசகர்களுக்காக தொடராகத் தர உள்ளோம், இன்ஷா அல்லாஹ்.

அறபியில்: அஹ்மத் பஹ்ஜத் | மலையாளத்திலிருந்து தமிழில்: ஜெ. இஸ்ஹாக்

# யூனுஸ் நபியின் திமிங்கிலம் 08

கப்பலிலிருந்து இறக்கிவிடப்பட்ட மூன்று தோணிகள் எங்களைப் பின்தொடர்ந்து வந்தன! திரும்பிச் சென்று ஓர் அடி அடித்தால் மூன்றும் தகர்ந்து தெறிக்கும் என்பது எனக்குத் தெரியும். ஆயினும், ஒரேயடியாகத் தாக்குதலில் இறங்காது சற்று என்ன செய்கிறார்கள் என்று அவதானிக்க விரும்பினேன்.

அதேவேளை எமது தலைவனான திமிங்கிலம் வாலடித்து குதிப்பதை நான் கண்டேன். தோணிகளில் இருந்து மிகத் தூரத்தில் இந்த விளையாட்டை தலைவன் செய்து கொண்டிருந்தார். அவரது வீர விளையாட்டில் கோழைத்தனமும் ஒளிந்து கொண்டிருந்தது போல எனக்குத் தோன்றியது. நாங்கள் மீண்டும் கடலில் மூழ்குவதற்கு எத்தனித்த அந்தக் கணத்தில் ஏதோ ஒரு சாதனம் எனது தந்தையை நோக்கி வேகமாக வருவதை நான் கண்டேன். எனது வயோதிபத் தந்தை திக்குமுக்காடுவதை நான் கண்டு அந்த இடத்திற்கு உடனே விரைந்தேன்.

''என்ன நடந்தது எனது அருமைத் தந்தையே?'' நான் பதற்றத்துடன் வினவினேன்.


''ஏதோ ஓர் ஆயுதம் என்னைத் தாக்கிவிட்டது! நான் மனிதர்களின் விளக்குகளுக்கு எண்ணெய்யாக மாறப் போகின்றேன் போலும். தரையில் மனிதர்களின் வீட்டுக் கூடங்களில் தொங்க வைக்கப்படும் பொருளாக நான் மாறப் போகின்றேன்...''

''கவலைப்படாதீர்கள். நீங்கள் இன்னும் நீடூழி காலம் வாழ வேண்டும் தந்தையே'' நான் அவருக்கு ஆறுதல் கூறினேன். நீரில் இருந்து வெளியே வந்த நான் மறுகணம் முன்னோக்கி வந்து கொண்டிருக்கும் பிரமாண்டமான கப்பலை நோக்கி வேகமாகத் திரும்பி நீந்தினேன். எங்களது தலைவன் கப்பலை நோக்கிச் செல்ல வேண்டாம் என்று பலமாக எச்சரித்தான். ஆயினும், அவனது எச்சரிக்கையை நான் ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. எனது தாடை எலும்புகளில் அபரிதமான சக்தி குவிந்தது! வாலின் ஆட்ட வேகம் கூடியது! நான் அடித்த அடியில் கப்பலின் முன்பாகம் இரண்டாகப் பிளந்தது!

எமது கூட்டத்தில் சேர்ந்திருந்த திமிங்கிலங்கள் எல்லாம் மகிழ்ச்சியால் ஆரவாரம் செய்தன. எமது தலைவன் வெள்ளைவால் திமிங்கிலத்தின் நெற்றி சுருங்கியது!

கப்பலைத் தகர்த்த பிறகு, நான் எல்லா திசைகளிலும் வாலைச் சுழற்றி தண்ணீரை வாரி இறைத்தேன். நான் தகர்த்த பனிப்பாறையை விட மிகவும் சிறியதாக இருந்தது கப்பல். பனிப்பாறையைத் தகர்த்த எனக்கு இக்கப்பல் வெறும் ஒரு சுண்டைக்காயைப் போல் இருந்தது.

சற்று நேரத்தினுள் கப்பலும் தோணிகளும் கடலில் மூழ்கி அடித்தளத்திற்கு சென்றன. மனிதர்களும் கூடத்தான். கடலின்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Public Library
Jaffna.

நீலநிறம் மீண்டும் அந்த இடத்தில் தோன்றியது. எனது தந்தை தாக்குதலுக்குள்ளாகி குற்றுயிரான நிலையில் நீரில் மிதந்து கொண்டிருந்தார். கருந்திமிங்கிலம் தந்தையின் நிலையை விசாரிக்க அவரை அணுகிக் கொண்டிருந்தான். நானும் நெருங்கிச் சென்றேன். நீ ஒரு சிறிதும் அசையக் கூடாது. அந்த இடத்தில் நில். நான் அவனைப்பார்த்து கர்ஜித்தேன். அவன் தோற்றத்தில் பெரிதாக இருந்தாலும் ஒரு பயந்த கோழை என்பது எனக்குத் தெரியும். திமிங்கிலங்களுக்கு இயல்பாக உள்ள எந்த வீரமும் பலமும் அவனிடம் இல்லை. அவன் ஒரு வெறும் மீன் மாத்திரம். சற்று திகைத்துவிட்ட அவன் என்னை நோக்கி வட்டமிட்டு வந்தான். எனது தந்தை தனது இறுதி மூச்சு இழுக்கும் நிலையில் இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

நான் என்ன செய்யப் போகின்றேன் என்பதை தந்தை புரிந்து கொண்டிருக்க வேண்டும். வேகமாகவும் மூர்க்கமாகவும் நான் பாய்ந்து சென்றேன். தந்தை இறப்பதற்கு முன்பு அவருக்கு நான் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும், திமிங்கிலங்களின் அரசனாக மாறவேண்டும் என்பதுதான் எனது தந்தையின் விருப்பமாக இருந்தது எனக்குத் தெரியும்.

கருந் திமிங்கிலத்துடன் போர் புரிவதற்கு வேறு சந்தர்ப்பம் எனக்கு கிடைக்கப் போவதில்லை. நான் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டேன். எனது சக்தி முழுவதும் எனது தலையில் குவிக்கப்பட்டிருந்தது. கருந்திமிங்கிலத்தின் வாலில்தான் அவனது பலம் குவிக்கப்பட்டிருந்தது. நான் முந்திக் கொண்டேன். எனது தாடைகளுக்கு இடையில் அவனது தலை. நீரில் பலம் கொண்ட மட்டும் அமிழ்த்தினேன். எனது அகோரப் பற்கள் அவனது தலையைப் பதம் பார்த்தன. சற்று நேரத்தில் அடங்கிப் போனான். நான் எனது வாயின் பிடியில் இருந்து அவனது தலையை விடுவித்தேன்.



இரண்டு திமிங்கிலங்களின் உயிரற்ற சடலங்கள் மெதுவாக கடலின் அடியில் சங்கமமாகின. ஒன்று எனது தந்தையின் சடலம்! மற்றது திமிங்கில இராஜாவாக கோலோச்சிய கருந்திமிங்கிலத்தின் சடலம்!

நான் தண்ணீர் பரப்பில் எனது வாலை சுழற்றி அடித்துக் கொண்டு உட்சுவாசித்தேன். ஏனைய எல்லாத் திமிங்கிலங்களும் என்னைப் பின்பற்றி என்னைப் போல செய்தன! என்னை அரசனாக அங்கீகரித்து கிரீடம் சுமத்தின. எனக்கு தமது பணிவை உணர்த்தின. பின்னர் நாங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து எம்மைப் படைத்த இறைவனுக்கு நன்றி செலுத்தினோம். கடலில் அலைகள் வழமைபோல ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தன.

நான்கு திசைக் கடலிலும் எனக்கு நிகரான எந்தத் திமிங்கிலமும் இருக்கவில்லை. சமுத்திரத்தில் வாழ்ந்த ஏனைய மூர்க்க ஜந்துக்கள் அனைத்தும் எனது அதிகாரத்தை ஏற்றுக் கொண்டன. அலைகள் என்னிடம் தாழ்ந்து பணிந்தன. சமுத்திரத்தில் நடந்த சகல கொடுமையான காரியங்களும் எனக்கு சர்வசாதாரணமாக மாறிவிட்டன. மனிதனைப் பற்றிய மர்மம் மாத்திரம் எனக்குத் திறக்காத இரகசியமாக தொடர்ந்து நீடித்தது.

என்னுடைய தந்தையின் கொலையுடனும் எனது மகுடம் எனக்கு கிடைத்த சந்தர்ப்பத்திலும் எழுந்து நின்று அலைகளிடையே எந்த மனிதக் கப்பலையும் கடலில் செல்லவிடாது தகர்ப்பேன் என்று சபதம் செய்தேன்.

மனிதன் தரையிலிருந்து இப்போது கடலுக்கும் ஆதிக்கம் செலுத்த வருகின்றான். அவனைத் தரைக்கு திருப்பி அனுப்ப வேண்டும். கடலில் அவனது நடமாட்டத்தை ஒழித்துக் கட்ட வேண்டும் என்றும் நான் தீர்மானித்தேன்.

பல வருடங்கள் தொடர்ந்து நான் எனது சபதத்தை நிறைவேற்றிக் கொண்டிருந்தேன்... எனது ஆதிக்கத்தில் இருந்த கடலில் ஒற்றைக் கப்பலாவது செல்வதற்கு நான் அனுமதிக்கவில்லை. காணுகின்ற எல்லாக் கப்பல்களையும் தகர்த்து மூழ்கடிப்பதை வழக்கப்படுத்திக் கெண்டேன். எங்களது எதிரிகளான சுறாக்களின் துணையுடன் அவன் வந்தால் கூட சுறாக்களையும் சேர்த்து நாம் கபளீகரம் செய்வோம்.

மனிதர்களுக்கும் எங்களுக்கும் உள்ள இந்தப் போராட்டம் தொடர்ந்தது. எப்போதும் மனிதர்கள் தோற்றார்கள். திமிங்கிலங்களான நாங்களே வெற்றி வாகை சூடினோம். ஆயினும், மனிதன் குறித்த இரகசியம் எனக்குப் பிடிபடவே இல்லை.

திமிங்கிலம் மனிதனை ஒரே விழுங்காக விழுங்கினால் அதன் வயிற்றிலிருந்து மனிதனால் தப்பவே முடியாது... என்றுதான் நான் நினைத்துக் கொண்டிருந்தேன்.

இந்தக் கேள்வி சதா என்னைக் குடைந்து கொண்டிருந்தது. ஒருநாள் இதற்கு விடை கிடைத்தது...

**இன்ஷா அல்லாஹ் தொடரும்...**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org







# இளம் தலைமுறையின் முன்மாதிரி
# பேராசிரியர் எஸ்.எச். ஹஸ்புல்லாஹ்

ஸஹீம் கமால்

**அறிமுகம்**

பேராசிரியர் எஸ்.எச். ஹஸ்புல்லாஹ் வட மாகாணம், மன்னார் மாவட்டத்தின் எருக்கலம்பிட்டியில் 03.09.1950 ஆம் ஆண்டு பிறந்தவர். பிறந்த ஊரில் ஆரம்பக் கல்வியைக் கற்று பேராதனை பல்கலைக்கழகத்தில் உயர் கல்வியைத் தொடர்ந் தார். அப்பல்கலைக்கழகத்திலேயே புவியியல் துறை உதவி விரி வுரையாளராக இணைந்து கொண்ட அவர், பின்னர் **British Columbia - Canada** பல்கலைக்கழகத்தில் முதுமாணி **(M.A)** மற்றும் கலாநிதி **(Ph.D)** படிப்பை முடித்து, பேராதனைப் பல்க லைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராகவும் பேராசிரியரா கவும் கடமையைத் தொடர்ந்தார்.


மானிடப் புவியியல், அரசியல் புவியியல், குடிபெயர்வு, உள்நாட்டு இடப்பெயர்வு முதலான துறைகளில் தேர்ச்சி பெற்றிருந்த பேராசிரியர் ஹஸ்புல்லாஹ், ஆங்கில மொழியில் பாண்டித்தியம் பெற்றிருந்தார். **University of Zurich (Switzerland), University of Edinburgh (UK), Norwegian University of Technology (Norway), University of British Columbia, Canada** போன்ற பல்கலைக்கழகங்களில் வருகைதரு விரிவு ரையாளராகவும் வருகைதரு பேராசிரியராகவும் ஆய்வாளராகவும் பணியாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது.

**வட மாகாண முஸ்லிம்களின் வெளியேற்றமும் பேராசிரியர் எம்.எஸ். ஹஸ்புல்லாஹ்வின் பணிகளும்**

1990 ஆம் ஆண்டு வடக்கிலிருந்த முஸ்லிம்கள் 24 மணிநேரக் கெடு வைத்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டபோது, 'வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு' ஒன்றை சிலருடன் இணைந்து உருவாக்கினார். 'அகதி' என்ற சஞ்சிகையை வெளியிட்டார். இந்த அமைப் பின் ஊடாக தேசிய, சர்வதேச மட்டத்தில் வடமாகாண அகதி முஸ்லிம் களின் பிரச்சினையைக்கொண்டு சென்றார். பேராசிரியர் ஹஸ்புல்லாஹ் பலவந்த வெளியேற்றத்தின் தாக்கங்களை மதிப்பீடு செய்து பல நூல் களை எழுதியுள்ளார்.

2002 இல் **LTTE** யுடனான பேச்சுவார்த்தைகள் நடைபெற்றகாலத்தில், முஸ்லிம் தரப்பு ஆலோசனைக் குழுவில் ஒருவராகவும் பேராசிரியர் ஹஸ்புல்லாஹ் உள்வாங்கப்பட்டிருந்தார்.

வடக்கு முஸ்லிம்களின் இடப்பெயர்வு பேராசிரியர் ஹஸ்புல் லாஹ்வின் சிந்தனைப் போக்கில் மாற்றங்களையும் தாக்கத்தையும் ஏற்படுத்தியது. அதனால் அவர்களின் விடயங்களில் தனது ஆய்வை



விரிவுபடுத்தினார். அனைத்து வீடுகளும் பூட்டப்பட்டிருந்த நிலையில், வீட்டு உரி மையாளரைத் தேடிச் சென்று இழப்பு களை மதிப்பீடு செய்தார். விஞ்ஞானபூர் வமாக சரியாக மதிப்பீடு செய்து பாராளு மன்றிற்கும் அறிக்கை சமர்ப்பித்தார்.

''அவரது வீட்டில் வடக்கு முஸ்லிம் சமூகம் சார்ந்த ஆய்வுகள் மலை போல் குவிந்திருந்தன'' என பேராசிரியர் எம். எஸ்.எம். அனஸ் குறிப்பிடுகின்றார். **UNO** விலிருந்து வந்த குழு கூட அவரது ஆய்வை ஏற்றுக் கொண்டது. பாதிப்புக் குள்ளான தான் சார்ந்த சமூகத்தின் மீது அதீத அன்பை அவர் வெளிப்படுத் தினார். அவரும் ஓர் இடம்பெயர்வாளர் என்பதால் உணர்வுடனும் உயிர்த்துடிப் புடனும் செயற்பட்டார். அவரது பணி ஆராய்ச்சி மட்டுமல்ல, பாதிக்கப்பட்ட மக்களுடன் கலந்து ஆறுதலும் வழங்கி னார். உள்ளூர் மக்களுக்கும் இடம் பெயர்ந்து குடியேறியோருக்குமிடையில் பிணக்குகள் வந்த போது அதை தீர்க் கவும் ஒற்றுமைக்காகவும் பாடுபட்டு,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கு வாழும் சூழலை உருவாக்கவும் சமூக நல்லுறவிற்காக தொடச்சியாக உழைத்துள்ளார்.

இன நல்லிணக்க விடயங்களில் அதிக அக்கறையும் காட்டினார். வடக்கு முஸ்லிம்களின் மீள்குடியேற்றமும் வில்பத்துப் பிரச்சினையும் இனவாத நோக்கில் அணுகப்பட்டு, முஸ்லிம்களின் இருப்பு கேள்விக் குறியாக்கப்பட்டபோது மீள் குடியேறுவதற்கான உரிமை மறுப்பு **(Denying the Right to Return)** எனும் நூலை எழுதினார். இந்த நூல் மூலம் மேலாதிக்க எண்ணம் கொண்ட பெரும்பான்மை இன-இனவாதம் பேசுவோருக்கு உண்மையை தெளிவுபடுத்த முனைந்தார்.

**அவரது எழுத்துப் பணி...**

2001 இல் **Muslim Refugees, the Forgotten People in Sri Lanka's Ethnic Conflict** எனும் நூலை ஆங்கிலத்தில் எழுதிய பேராசிரியர் ஹஸ்புல்லாஹ், 2015 இல் உள்நாட்டு, வெளிநாட்டு கல்வியியலாளர்களுடன் இணைந்து **Checkpoint, Temple, Church, and Mosque** எனும் ஆய்வு நூலையும் வில்பத்து விவகாரம் சூடு பிடித்திருந்த சந்தர்ப்பத்தில் **Denying the Right to Return & Resettlement in Musali South and the Wilpattu Controversy** எனும் ஆய்வு நூலையும் எழுதி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பங்களிப்பை நல்கினார்.

மேலும் ''இலங்கையின் இனப் பிரச்சினையும் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட வட மாகாண முஸ்லிம்களும்'' எனும் பிரதான தலைப்பில் முல்லைத்தீவு முஸ்லிம்கள், முசலி முஸ்லிம்கள், மாந்தை நானாட்டான் முஸ்லிம்கள் ஆகிய மூன்று வெவ்வேறு பகுதிகள் குறித்த ஆய்வு நூல்களை தொகுத்தளித்தார்.

வருடாந்தம் முஸ்லிம் சமய, பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் தேசிய மீலாத் விழாவை முன்னிட்டு வெளியிட்ட ஆய்வு நூல்களில் இவரது ஆய்வுக் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. அவற்றில் குடியிருப்புப் பரம்பல்- கண்டி மாவட்ட முஸ்லிம்கள், குடியிருப்புப் பரம்பல்- புத்தளம் மாவட்ட முஸ்லிம்கள் ஆகிய ஆய்வுக் கட்டுரைகள் குறிப்பிடத்தக்கவை.

தவிரவும் விரிவுரையாளர் எம்.பி.எம். சைபுத்தீன் அவர்களுடன் இணைந்து ''இலங்கை முஸ்லிம் கல்வி'' எனும் நூலையும் எழுதி கல்வித் துறையிலும் பங்காற்றினார்.

பேராசிரியர் ஹஸ்புல்லாஹ், ஆய்வுகளை விஞ்ஞான பூர்வமாகவும் தகுந்த புள்ளி விபரங்களுடனும் தெளிவாக முன்வைக்கும் ஆற்றல் கொண்டவர். தான் சரிகண்ட கருத்தை அழுத்தம் திருத்தமாக முன்வைப்பார். அதற்கான ஆதாரங்களை அடுக்கடுக்காக முன்வைப்பார்; ஆழமாக சிந்திப்பார்; அழகாக முரண்படுவார்.


எளிமை அவரோடு ஒட்டிப் பிறந்த பண்பு. இன, பிரதேசவாத எல்லைகளுக்கு அப்பால் அனைவருடனும் அன்பாகவும் நட்புறவுடனும் பழகும் பண்புடையவர்.

**இறுதிப் நாட்கள்...**

மாகாண சபை தேர்தல் தொகுதி எல்லை நிர்ணய குழுவில் அங்கம் வகித்த பேராசிரியர் ஹஸ்புல்லாஹ், அந்த அறிக்கையின் உள்ளடக்கம் பொதுவாக சிறுபான்மையினரையும் குறிப்பாக முஸ்லிம்களையும் பாதிக்கும் வகையில் உள்ள புதிய எல்லைப் பிரிப்புகள் குறித்து முஸ்லிம் அரசியல்வாதிகளையும் சிவில் சமூகத்தையும் விழிப்புணர்வூட்டி வந்தார். சமூக செயற்பாட்டாளர்களுடன் இணைந்து செயற்பட்டார். அல்லாஹ்வின் அருளால் அவர் மரணிப்பதற்கு முதல் நாள் பாராளுமன்றத்தில் அச்சட்டமூலம் தோற்கடிக்கப்பட்டது. அதனையிட்டு அவர் பெரு மகிழ்ச்சியடைந்தார். தனக்கு நெருக்கமான பலருடன் தொடர்பு கொண்டு தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியிருந்தார்.

பேராசிரியர் ஹஸ்புல்லாஹ் அவர்களின் பல்துறைப் பங்களிப்பு நன்றியுடன் நினைவு கூரத்தக்கது. அவர் இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் என்றென்றும் நினைவுகூரப்பட வேண்டியவர். அவரது பணிகள் தொடர வேண்டும். அவர் துவங்கி வைத்த பணிகள் நிறைவடைய வேண்டும். அவரது காலடித் தடங்களைப் பின்துயர்ந்து களப் பணிகளை தொடர ஒரு குழு தயாராக வேண்டும். அவைதான் அவரை நினைவு கூருகின்ற மிகச் சிறந்த வழிமுறைகளாக இருக்கும்.

**மே மாத அகரம் சஞ்சிகை
புனித ரமழான்
மாதத்துக்குரிய
வழிகாட்டல்கள்,
சிறப்புக்களை
தாங்கியதாக வெளிவர
இருக்கின்றது,
இன்ஷா அல்லாஹ்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிந்தனைத் துளிகள்

1. எங்கே விழுந்தாயெனப் பார்க்காதே; எங்கே வழுக்கியதெனப் பார்.
2. கற்றுக் கொள்ள வேண்டுமா? முதலில் அறிந்ததை சொல்லிக்கொடு, கற்றுக் கொள்வாய் பெற்றுக் கொள்ள வேண்டுமா? முடிந்ததை அள்ளிக் கொடு பெற்றுக் கொள்வாய்.
3. மக்களோடு ஒரு கூட்டத்தில் இருந்தால் நாவைப் பாதுகாத்துக் கொள். அடுத்தவரின் வீடுகளுக்கு சென்றால் கண்ணைப் பாதுகாத்துக் கொள். உண வுக்காக உட்கார்ந்தால் வயிற்றைப் பாதுகாத்துக் கொள்.
4. இரண்டு விடயங்களை ஒருபோதும் நினைவு கூராதே
   1. மக்கள் உனக்கு செய்த தீங்கு
   2. நீ மக்களுக்கு செய்த நன்மை
5. நீ செய்த தவறுக்காக மற்றவனிடம் மன்னிப்புக் கேட்க உனது மனதுக்கு வலிக்கிறது என்றால் உனது தவறுகளால் அவர்கள் எந்தளவு வலியை அனுபவித்திருப்பார்கள்.
6. உனது நேரம் உனக்குரியது. மற்றவர்கள் உன்னைப் பற்றி கூறுகின்றவற்றை சிந்தித்து உனது நேரத்தை அவர்களுக்குக் கொடுத்து விடாதே.

✍ **டீ.எப். ஸனா**
**சுமைய்யா ம.அ.க., கிண்ணியா 04**



# இலங்கை
## பற்றி

1. இலங்கையின் நீளம் - *433 km / 269 மைல்*
2. இலங்கையின் அகலம் - *226 km / 140 மைல்*
3. இலங்கையின் நிலப்பரப்பு - *62705* $km^2$
4. இலங்கையின் நீர்ப்பரப்பு *2905* $km^2$
5. இலங்கையின் தலைநகரம்
   - ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை
6. இலங்கையின் சிறப்புப் பெயர்
   - இந்து சமுத்திரத்தின் முத்து, நித்திலம்
7. இலங்கையின் நாணயம் - ரூபா
8. இலங்கை அமைந்துள்ள கண்டம் - ஆசியா
9. இலங்கை அமைந்துள்ள சமுத்திரம்
   - இந்து சமுத்திரம்
10. இலங்கையின் தேசிய மிருகம் - மர அணில்
11. இலங்கையின் தேசிய விளையாட்டு
    - கரப்பந்தாட்டம்
12. இலங்கையின் தேசிய சங்கீத உபகரணம் - றபான்
13. இலங்கையின் தேசிய இரத்தினம் - நீல மாணிக்கம்

✍ **டீ.எப். ஸனா**
**சுமைய்யா ம.அ.க., கிண்ணியா 04**

# சிந்தனைத் துளிகள்

- அனுபவத்தை எந்த ஆசிரியராலும் கற்றுக் கொடுக்க முடியாது. அதற்கு பல தோல்விகளும் சில எதிரிகளும் தேவை.
- போலிக்குத்தான் பரிசும் பாராட்டும். உண்மைக்கு ஆறுதல் பரிசு மட்டும்.
- பல தோல்விகளையும் சந்தித்த பின் வெற்றி கிடைத்தால் ஒவ்வொரு தோல்வியும் வெற்றி என அறிந்து கொள்.
- ஏமாற்றியவர்களுக்கு நன்றி சொல். அவர்கள் ஏமாற்றத்தை சொல்லித் தரவில்லை. இனி ஏமாறாமல் இருக்க அனுபவத்தைக் கற்றுத் தந்திருக்கிறார்கள்.
- எதிர்ப்பு இருக்கும் என்பதற்காக கருத்துக்களை முடக்கி வைக்காதீர்கள். அங்கீகாரம் பெற்ற எல்லா கருத்துக்களும் ஒரு காலத்தில் எதிர்க்கப்பட்டவையே!
- இறக்கத்தான் பிறந்தோம்; அதுவரை இரக்கத்தோடு இருப்போம்.



✍ **ஆர். லிகா**
**நிக/நம்முவாவ மு.ம.வி.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# அறிஞர்களின்
## பேனாவிலிருந்து

- ☆ நாம் மனம் வைக்காத எந்தச் செயலையும் செய்யுமாறு நாம் இவ்வுலகிற்கு அனுப்பி வைக்கப்படவில்லை. **(ரஸ்கின்)**
- ☆ மனிதத் தன்மையுடன் செயலாற்றுகிறவர்களுக்கு எல்லாம் ஆரம்பத்தில் ஒரே ஒரு மாணவன்தான் கிடைப்பான். அவன் யாரெனில் அவர்களே தான். **(அப்துர் ரஹீம்)**
- ☆ முதலில் பழக்கங்களை நாம் உருவாக்குகின்றோம். பின்னர் பழக்கங்கள்தாம் நம்மை உருவாக்கின்றன. **(அப்துர் ரஹீம்)**
- ☆ ஒரு செயல் தொடர்ந்து புரியப்பட்டால் அதுவே பழக்கமாகி விடுகிறது. அந்தப் பழக்கத்தை அனுமதித்து விட்டோமானால் அது நிதானமாய் உரம் பெறத்துவங்கி விடுகிறது. முதலில் அது சிலந்திப் பூச்சியின் வலைபோல் எளிதில் பிய்த்தெறியக்கூடிய நிலையில் மெல்லியதாகவே இருக்கும். ஆனால், உடனே பிய்த்தெறியாது விடப்பட்டாலே, அது எஃகுச் சங்கிலி போன்று நம்மை இறுக்கிப்பிணைக்க ஆரம்பித்து விடும். **(ட்ரியான் எட்வர்ட்ஸ்)**
- ☆ நீந்தக் கற்க வேண்டின் நீரில் இறங்கிவிட வேண்டும். மணலில் ஊர்ந்து நீரில் நீந்தக்கற்றுக் கொள்ள முடியாது. சர்க்கரையின் சுவையை விவரிக்கும் ஆயிரம் நூல்களைப் படித்தாலும், சர்க்கரையை அள்ளி வாயில் போட்டுச் சுவைத்து உணரும் அறிவைப் பெற முடியாது. அதுபோலவே ''மன ஒருமை கொள்ள, அலையும் மனதை அடக்கிச் செயலில் இறங்க வேண்டும்.'' **(அப்துர் ரஹீம்)**



✍ **ஸஹ்லா ஸதா அஷ்ரப்**
**நீகொ/பன்னவ மு.ம.க.**

# தாயின் கண்ணியம்

தாயின் பாசம் உண்மையான பாசம்
பிள்ளைகளின் உள்ளத்தில்
பிரியாத இடம் பிடித்தவள்
தாய் மட்டுமே
தாயின் உள்ளத்தை பதற வைத்து
விடாதே மனிதனே
தாயை துன்புறுத்தியவர்கள் உலகில்
அழிவடைந்து போவார்கள்
மறுமையில் கை சேதப்படுவார்கள்
தாயை கண்ணியப்படுத்து மனிதனே
நீ எதிர்பாராத நிலைகளில் உனக்கு
வெற்றியை தரும்
தாயை இழந்தவர்களுக்கு தெரியும்
தாய்ப் பாசம்
தாயின் பாதத்தின் கீழ் சுவர்க்கம்
என்று சொன்னது இஸ்லாம்

✍ **ஏ.எம்.எம். அப்கி**
**சம்மாந்துறை**

# சிந்தனைத் துளிகள்

உன்னைப் பற்றி பின்னால் பேசுபவர்கள் தொடர்பில் நீ கவலைப்படாதே! அவர்கள் உன்னைவிட பின்னால் இருக்கிறார்கள்; நீ முன்னிலையில் இருக்கிறாய் என்பதை அறிந்து கொள்!

சில சந்தர்ப்பங்களில் நீ தோற்றுப் போகலாம். அதற்காக உன் வாழ்க்கையே தோற்று விட்டது என்று தோய்ந்து விடாதே. முயற்சி செய் முடியுமானவரை அல்ல அத்தோல்வி வெற்றியாகும் வரை!

உலகில் நாம் வாழ வேண்டும் சாகும் வரை அல்ல! நம்மை வெறுத்தவர் வாழ்த்தும் வரை!

✍ **நஸீஹா நிஸாம்தீன்**
**இஸ்லாஹிய்யா அ.க., முதலாம் வருடம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ஷெய்க் ஆலிப் அலி (இஸ்லாஹி)
BA.(cey), Dip. in psychological Counseling.
www.aliaalif.tk / aalifali@gmail.com



# ஓங்கி வளரும் மூங்கில் மரம்

பேராதனை தாவரவியற் பூங்காவிற்குச் சென்றால் தவறாமல் ஒரு முறை மூங்கில் மரங்கள் நிறைந்திருக்கும் பகுதிக்குச் சென்று வாருங்கள். வகை வகையான மூங்கில் மரங்களைக் கண்டுகொள்ளலாம். பச்சை மூங்கில், மஞ்சள் மூங்கில், கருப்பு மூங்கில், சிவப்பு மூங்கில் என ஏராளமான, அளவிலும் தோற்றத்திலும் வித்தியாசமான பல மூங்கில் மரங்களைக் கண்டுகொள்ளலாம். அந்த இடம் கூட பார்ப்பதற்கு அழகாகவும் ரம்மியமாகவும் இருக்கும். பூங்காவுக்கு பூக்களை மட்டுமே பார்க்கச் செல்லும் பலரும் மூங்கில் மரத்தில் என்னதான் இருக்கின்றது பார்ப்பதற்கு? என்று அலட்சியத்துடன் அதன் அழகை ரசிக்கும் சந்தர்ப்பத்தைத் தவற விடுகின்றனர். பார்ப்பதற்கு மட்டுமல்ல, படிப்பதற்கும் மூங்கில் மரத்தில் பல விடயங்கள் இருக்கின்றன. படிப்போமா?

## அறிமுகம்

தாவர உலகில் பிரதான இடத்தைப் பிடிக்கும் முக்கியமானதொரு தாவரம்தான் மூங்கில். மூங்கில் ஒரு விவசாயத் தாவரமாக நோக்கப் படுகின்றது. அதனால்தான் மூங்கில் ஏழைகளின் மரம் என்றும் பச்சைத் தங்கம் என்றும் அழைக்கப்படுகின்றது. மூங்கில் மரம் என்று தமிழிலும் **Bamboo tree** என்று ஆங்கிலத்திலும் உண கஸ் என்று சிங்களத்திலும் அழைக்கப்படுகின்றது. மூங்கில் என்பது மரமா? புல்வகையைச் சேர்ந்ததா? என்று கேட்டால் பலரும் அதனை மரம் என்றுதான் கூறுவார்கள். ஆனால், விஞ்ஞானப் பிரிப்பில் மூங்கில் மரவகையை சேர்ந்தது அல்ல. அது புல்வகையை சேர்ந்தது. புல் வகையில் பெரிதாகவும் உறுதியாகவும் அதிக உயரமாகவும் வளரும் ஒரே தாவரம் மூங்கிலாகும். என்றாலும் பின்வரும் பந்திகளில் எமது வழக்கப்படி நாம் மரம் என்றே பயன்படுத்துவோம்.

## வளரும் பிரதேசங்கள்

பொதுவாக எல்லா நாடுகளிலும் எல்லாப் பிரதேசங்களிலும் மூங்கில்களைக் காணலாம். தென்கிழக்கு ஆசியா, இந்தியா மற்றும் பசுபிக் கடலை சார்ந்த தீவுகளில் மூங்கில் பெருமளவில் வளர்கிறது. சீனா, ஜப்பான், இந்தியா, இலங்கை, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தோனேசியா, நேபாளம், பங்களாதேஷ், கோஸ்ட ரிக்கா, கென்யா ஆகிய நாடுகள் மூங்கில் உற்பத்தியில் முன்னணி நாடுகளாக இருக்கின்றன. மூங்கில் உற்பத்தியில் சீனாதான் உலகில் முதலிடத்தில் இருக்கின்றது. கடல் மட்டத்திலிருந்து 400 மீற்றர்கள் உயரம் உள்ள பிரதேசங்களில்தான் மூங்கில் நன்றாக வளரும். எனவே, மலைச்சரிவுகளும் மிக வரண்ட பகுதிகளும் மூங்கில் வளர்வதற்கு ஏற்ற இடங்கள். இந்தியாவில் 156 வகை மூங்கில் இனங்கள் பயிரிடப்படுகின்றன. இலங்கையிலும் தாராளமாகக் கண்டுகொள்ளலாம்.

### மூங்கிலின் வகைகள்

உலகம் முழுவதும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வகையின மூங்கில்கள் காணப்படுகின்றன. இவை கால, சூழலுக்கு அமைய வெவ்வேறு இடங்களில் வளர்கின்றன. அவற்றில் மிதமான வரண்ட பகுதிகளில் வளரும் கல் மூங்கில், ஈர செழிப்புள்ள பகுதிகளில் வளரும் முள் மூங்கில் அல்லது பொந்து மூங்கில் மற்றும் முள்ளில்லா மூங்கில் ரகங்களாகிய பாம்பூசா வல்காரிஸ் மற்றும் பாம்பூசா பல்கோவா, போன்சாய் குட்டை மூங்கில் என 1000 இற்கும் அதிகமான மூங்கில் மரங்கள் காணப்படுகின்றன. மூங்கிலில் எந்த வகையாக இருந்தாலும், அதன் தண்டுப்பகுதி வழுவழுப்பாகவும் திடமாகவும் இருக்கும். பொந்து மூங்கில் என்பது அவற்றின் தண்டின் நடுப்பகுதியில் கீழிருந்து மரத்தின் உச்சி வரை துவார அமைப்பில் இடைவெளி இருக்கும். இதுவல்லாத முள்ளில்லாத மூங்கில்கள் தண்டின் உற்பகுதியில் இடைவெளி இன்றி சிறிதாகவும் கெட்டியாக இருக்கும்.

### ஓங்கி வளரும் மூங்கில்

தாவரங்களிலேயே மிக வேகமாக வளரக்கூடியது மூங்கில் மரம்தான். சாதாரணமாக மூங்கில் மரம் 60 வருடங்கள் உயிர் வாழும். ஒவ்வொரு வகை இனமும் வித்தியாசமான வேக அளவில் வளர்ச்சி அடையும். சில வகை ஒரு நாளைக்கு 16 அங்குலம் என்ற விகித்ததில் வளரும். இன்னும் சில மரங்கள் ஒரு நாளில் ஒரு மீற்றர் உயரம் வரை வளர்கின்றன. மொத்தமாக 90 அடி உயரம் வளரும் ஒரு மூங்கில் அந்த உயரத்தை எட்டிப் பிடிப்பதற்கு எடுத்துக் கொள்ளும் காலம் வெறும் 6 வாரங்கள் தான். ஆறு வாரங்களில் அவ்வளவு வேகமாக வளர்ந்து விடுகின்றன. எனவேதான், உலகில் மிக வேகமாக ஓங்கி வளரும் தாவரமாக மூங்கில் கருதப்படுகின்றது. மூங்கிலின் அதிக அளவு பருமன் 1 செ.மீ. இலிருந்து 30 செ.மீ. வரை இருக்கும். இவை வரட்சியான பிரதேசங்களிலும் தண்ணீர் பற்றாக்குறையாக இருந்தாலும் நன்கு வளர்கின்றன. விதையாக இருக்கும்போது தண்ணீர் தேவைப்பட்டாலும் அது வளர்ந்ததன் பின்னர் குறைவான தண்ணீரிலும் கிடு கிடுவென வளர்ந்து விடும்.

### மூங்கில் கற்றுத் தரும் பாடம்

மிக வேகமாக வளரும் தாவரம் மூங்கில் என்றாலும் அதில் மற்றொரு சங்கதியும் இருக்கின்றது. அது எமது வாழ்க்கைக்கு அழகான, ஆழமானதொரு படிப்பினையைச் சொல்லித் தருகின்றது. ஒரு விவசாயி மண்ணில் மூங்கில் மரத்தின் விதையை நட்டுகின்றான். அது பெரும் மரமாக வளரும் என்ற நம்பிக்கையில் நட்டுகின்றான். ஒவ்வொரு நாளும் அந்த இடத்திற்குத் தண்ணீர் ஊற்றுகின்றான்; பசளை இடுகின்றான். ஆதரவோடு ஒவ்வொரு நாளும் அந்த இடத்தைச் சென்று பார்க்கின்றான். அந்த இடத்தைச் சுற்றி முளைக்கும் காட்டுச் செடிகளைப் பிடுங்கி எறிகின்றான். இப்படி பெரும் எதிர்பார்ப்போடு நாட்கள் கழிகின்றது. ஒரு நாள், இரண்டு நாள், மூன்று நாள் அல்ல ஒரு வாரம், இரண்டு வாரம், மூன்று வாரம் அல்ல ஒரு மாதம், இரண்டு மாதம், மூன்று மாதம் இல்லவே இல்லை. மாதங்கள் உருண்டோடியும் எந்த அசைவும் இல்லை. விதைகள் போடப்பட்ட இடம் அப்படியேதான் இருக்கும். ஆனாலும், நம்பிக்கை இழக்காமல் தொடர்ந்தும் விவசாயி நீர் ஊற்றி, பசளையிட்டு வருகின்றான். இப்படியே ஒரு வருடம் சென்றது ம்ஹூம், இரண்டு வருடங்கள் கடந்தன ம்ஹூம், மூன்று வருடங்கள் ஓடிவிட்டன. என்னவொரு ஏமாற்றம்?

இன்னும் நிலம் நிலமாகத்தான் இருக்கின்றது. ஒரு மாற்றம் கூட இல்லை. இதனை நட்ட விவசாயியின் மனநிலையை எண்ணிப் பாருங்கள். விதைகள் அழுகி விட்டனவா? என்ற எண்ணமும் விவசாயிக்கு வந்து விட்டது. தனது நேரம், காலம், சக்தி, முதலீடு எல்லாம் வீணாகின்றனவோ என்று கவலை வேறு வந்துவிட்டது. சுற்றியிருப்பவர்கள் கிண்டல் செய்யவும் ஆரம்பித்து விட்டனர். இருந்தாலும் விவசாயி தன் நம்பிக்கையை கைவிடவில்லை. தொடர்ந்தும் உழைத்தான். பொறுமையாக செயற்பட்டான்.. நான்கு வருடங்கள் ஆயின. ஒரு துரும்பு கூட மண்ணைவிட்டு வெளியே வந்திருக்காது. இன்னும் உழைத்தான் மொத்தமாக ஐந்து வருடங்கள். இதோ இப்போது ஒரு மாற்றம் மண்ணில். விவசாயியின் முகத்தில் சந்தோஷம். ஐந்து வருட உழைப்பின் பிரதிபலனை விவசாயி காணப் போகின்றான். இதோ நினைத்துப் பார்க்காத வேகத்தில் மூங்கிலில் மண்ணை முட்டி காற்றில் மோதி விண்ணை நோக்கி வீரிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளரத் தொடங்கியது. 10 அடி, 20 அடி, 30 அடி, 40, 50, 60, 70, 80 அடிகள் என 90 அடி வரை உயர்ந்து நின்றது. விவசாயி பூரித்துப் போனான். வெறும் ஆறு வாரங்களில் 90 அடிவரை வானளாவ வளர்ந்து உயர்ந்து நின்றது மூங்கில். ஐந்து வருட உழைப்பின் பயனை வெறும் ஆறே வாரங்களில் கண் முன்னால் காண்கின்றான். இது கதையல்ல. மூங்கில் மரத்தின் நிஜமான வாழ்க்கை. எந்தவொரு மகத்தான சாதனையும் நீண்டகால உழைப்பின் மூலமே சாத்தியமாகும் என்ற சிறந்ததொரு பாடத்தை, படிப்பினையை மூங்கில் மரம் எமக்குக் கற்றுத் தருகின்றது. சுபஹானல்லாஹ்!

### கண்ணுக்கு குளிர்ச்சி தரும் மூங்கில்

மூங்கில் மரத்தில் தனி அழகு உண்டு. சில மரங்களில் அவற்றின் தண்டுப் பகுதி தனி மஞ்சள் நிறத்திலும் சிலதனி பச்சை நிறத்திலும் இன்னும் சில மஞ்சள் தண்டில் பச்சைக் கோடுகள் அமைந்தும் காணப்படும். நன்கு முற்றிய இலைகள் கடும் பச்சை நிறத்திலும் கொழுந்து இலைகள் இளம் பச்சை நிறத்திலும் காட்சி தரும். இலைகளும் கூட நீண்டு சிறிய சிறிய இலைகளாக இருக்கும். பார்க்கும்போதே கண்ணைப் பறிக்கும் மஞ்சள், பச்சைக் கலவைதான் மூங்கில் மரம். எனவே, அதிகமாக சூரிய வெயில் படும் இடங்களில் பாதை ஓரங்களில், பஸ் தரிப்பு, புகையிரத, விமான நிலையங் களில், பொதுச் சந்தைகளில், பாடசாலை வளாகங் களில், மைதான ஓரங்களில், சன நெரிசலான இட ஒதுக்குப் புறங்களில் மூங்கில் மரங்களை நாட்டுவதால் வெயிலின் கொடுமையைத் தணித்து கண்களுக்கு குளிர்ச் சியையும் பசுமையையும் மனதிற்கு ஆறுதலையும் நிம்மதியையும் இந்த மூங்கில் மரங்கள் தருகின்றன.

### காற்றைச் சுத்தப்படுத்தும் மூங்கில்

உயிர் வாழ்க்கைக்குத் தேவையான ஒக்ஸிஜன் வாயுவை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள்தான் தாவரங்கள். அதிலும் மற்றத் தாவரங்கள் அனைத்தையும் விட அதிகளவிலான கரியமில வாயுவை (காபன்டை ஒக்ஸைட்) உள்ளிழுத்து அதனை எம்மால் சுவாசிக்க முடியுமான ஒக்ஸிஜன் வாயுவாக மாற்றித் தரும் பெரும் வேலையைச் செய்வது இந்த மூங்கில் மரங்கள்தான். ஒரு மூங்கில் தனது வாழ்நாளில் 450 டொன் கார்பன் டை ஆக்சைடை உறிஞ்சி, அதற்கு நிகரான ஒக்சிஜனை வெளியிடுகிறது என்று சமீபத்திய ஆய்வில் கண்டுபிடித் துள்ளனர். எனவே, மூங்கில் சுற்றுச்சூழலை பாதுகாக்க சிறந்த மரம் என்று கருதப்படுகிறது. ஒரு மனிதனுக்கு ஓர் ஆண்டில் தேவைப்படும் ஒக்ஸிஜன் 292 கிலோ. ஒரு நாளைக்கு தேவைப்படுவது 800 கிராம் என்பது உலக சுகாதார நிறுவனத்தின் (W.H.O.) ஆராய்ச்சி முடிவு. ஒரு மூங்கில் மரம் ஓர் ஆண்டில் 309 கிலோ ஒக்ஸிஜ னைத் தருகிறது. அதாவது நாள் ஒன்றுக்கு 850 கிராம். ஆக எமது சுற்றுச் சூழலில் மூங்கில் மரங்களை அதிகமாக நடுவதால் எவ்வளவு சுகாதாரமான வாழ்வு கிடைக் கின்றது பார்த்தீர்களா?

### ஏழைகளின் மரம் மூங்கில்

மூங்கில் ஏழைகளின் மரம் என அழைக்கப்படுவது முண்டு. பல நாடுகளில் மூங்கில் விவசாயம் செய்யப் பட்டு விற்பனை செய்யப்படுகின்றது. இது அந்நாட்டு ஏழைகளின் வருமானத்திற்கான சுய தொழிலாக இருக் கின்றது. குறைந்த செலவில், நீண்ட நாள் உழைப்பில் அதிகமான வருமானத்தை அவர்களுக்கு மூங்கில் மரங்கள் ஈட்டிக் கொடுக்கின்றன. மூங்கில் நட்டு ஐந் தாண்டுகளின் பின்னர் அவை அறுவடைக்குத் தயாராகி விடும். பல்வேறு வேலைகளுக்காவும் உபகரணங்கள் தயாரிப்பதற்காகவும் வேலைப்பாடுகள் செய்வதற்காக வும் இவை விற்பனை செய்யப்படுகின்றன. சர்வதேச மூங்கில் மற்றும் பிரம்பு வலையமைப்பு என்பது இது போன்ற வேலைகளுக்காக மூங்கிலை பிரபலப்படுத்தும் சர்வதேச அமைப்பாகும். எமது நாட்டிலும் நீங்கள் கொழும்பிலிருந்து கண்டி நோக்கிச் செல்லும்போது இடையில் வரும் தித்தல்மங்கட எனும் ஊர் மூங்கில், பிரம்புகளைப் பயன்படுத்தி அலங்காரப் பொருட்கள் செய்வதற்கு பேர்போன இடமாகும்.

### பயன் மிகு மூங்கில்

மூங்கில் மரத்தினால் 1500 இற்கும் மேற்பட்ட பயன் கள் இருப்பதாக விவசாய ஆய்வாளர்கள் தெரிவிக் கின்றனர். குடிசை வீடுகள் கட்டுவதற்கும், கூரைகளின் உத்திரமாகவும், வேலிகள் அமைக்கவும், சுவர் தடுப்புகள் செய்யவும் கட்டட நிர்மாணப் பணிகளின்போதும், கைவினைப் பொருட்கள் தயார் செய்வதற்கும் கூடை, ஏணி, கைப் பிடிகள் தயாரிப்பதற்கும் சிறு தொழில் மற்றும் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஏராளமான தொழில்களிலும் மிக முக்கிய பொருளாக மூங்கில் பயன்படுகிறது. ஜப்பான் நாட்டில் தோட்டக்கலை நிபுணர்களும் விவசாயிகளும் மூங்கிலை நீர்க் குழா யாக பயன் படுத்துகிறார்கள். மூங்கில் இலைகள் மற்றும் அவற்றின் தூள்களைப் பயன்படுத்தி காகிதம் தயாரிக்கப் படுகின்றது. அத்தோடு உயர்தரமான காகிதப் பண நோட்டுகள் கூட மூங்கிலின் இலைகளால்தான் தயாரிக் கப்படுகின்றன.

39ஆம் பக்கம் பார்க்க...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Health Corner

Dr. JM Naijeel (BUMS)

# நீரிழிவு நோய்
## Diabetic Mellitus



அகரம் சஞ்சிகையின் தொற்றா நோய்கள் சம்பந்தமாக தொடராக கலந்துரையாடி இருக்கிறோம். அந்த வகையில் தொற்றா நோய்களில் பிரதானமான நோயான நீரிழிவு நோய் **Diabetic Mellitus** சம்பந்தமாகவே இம்மாத அகரம் சஞ்சிகையில் பார்க்க இருக்கிறோம்.

- ❖ இலங்கையின் சனத்தொகையில் 25% மானோர் இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
- ❖ 2050 ஆம் ஆண்டாகும்போது இது 50% ஆக அதிகரிக்கும் என மருத்துவ உலகம் எதிர்வு கூறுகிறது. அதாவது இலங்கையின் சனத்தொகையில் அரைவாசிப் பேர் இந்நோயினால் பாதிக்கப்படுவர்.
- ❖ பாடசாலை மாணவர்கள் மற்றும் சிறுவர்கள் 15% மானோர் இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**நீரிழிவு நோய் என்றால் என்ன? (Diabetic Mellitus)**

- ❖ நாம் உயிர்வாழ்வதற்கும் தொழிற்படுவதற்கும் சக்தி தேவைப்படுகிறது. இச்சக்தி நாம் சாப்பிடும் மாப்பொருள் சமிபாடடைந்து உருவாகும் குளுக்கோஸில் இருந்து பெறப்படுகிறது. இந்த குளுக்கோஸ் எமது இரத்தத்தில் ஒரு சீரான மட்டத்தில் பேணப்படும்.
- ❖ குளுக்கோஸை எமது உயிர்க் கலங்கள் பயன்படுத்துவதில் பாதிப்பு ஏற்படும்போது இரத்தத்தில் குளுக்கோஸின் மட்டம் சாதாரண அளவை விட அதிகரிக்கும். இந்நிலைமை நீரிழிவு நோய் என அழைக்கப்படுகிறது.

### நீரிழிவு நோயின் வகைகள்

**இன்சுலினில் தங்கியுள்ள நீரிழிவு நோய்**

**Insulin Dependent Diabetic Mellitus**

இது **Tipe I:** நீரிழிவு நோய் என அழைக்கப்படும். சதையியில் உள்ள **Insulin** சுரக்கும் கலங்கள் முற்றாக தொழிற்படாமல் அல்லது குறிப்பிடத்தக்கதை அழிக்கப்படுவதால் உருவாகும்.

அதிகமாக சிறுவயதினரையே பாதிக்கும். வாழ்நாள் முழுதும் **Insulin** ஏற்றுதல் வேண்டும்.

**இன்சுலின் தங்கியிரா நீரிழிவு நோய்**

**Non Insulin Dependent Diabetic Mellitus**

இது **Tipe II:** நீரிழிவு நோயாகும். பொதுவாக 35 வயதுக்கு மேற்பட்டோருக்கு ஏற்படலாம். இன்சுலினின் செயற்படும் தன்மை மற்றும் இன்சுலின் சுரக்கும் தன்மை என்பவற்றில் குறைபாடு காரணமாக ஏற்படுகின்றது.

பொதுவாக இவர்களுக்கு **Insulin** வழங்க வேண்டியிராது.

**கர்ப்ப காலங்களில் ஏற்படும் நீரிழிவு நோய்**

**Gestational Diabetic Mellitus**

கர்ப்ப காலங்களில் பெண்களில் ஏற்படலாம். இப்பெண்களின் வாழ்க்கையின் பிற்பகுதியில் **Tipe III:** நீரிழிவு நோய் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

எதிர்காலத்தில் நீரிழிவு நோய் ஏற்படுவதை பின்வருவனவற்றை பின்பற்றுவதன் மூலம் தவிர்த்துக் கொள்ளலாம்.

1. உடற்பருமன் அதிகரிப்பதை தவிர்த்தல். **(BMI** ஐ சாதாரண அளவில் பேணல்)
2. ஒழுங்காக உடற்பயிற்சி செய்தல்.
3. ஆரோக்கியமான உணவுப்பழக்கத்தை கடைப்பிடித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Miss. Aysha Hassan

## Assalamu Alaikum
# my dear friends!!!

In the month of April, while we are getting roasted under the scorching sun, let me share with you some tips to keep yourself hydrated, before we move on to the main topic.. Please do follow these tips to keep yourself cool and comfortable. For heat could bring dizziness and make us less productive.

1. Always carry with you a mega bottle, preferably a good looking one, for this would motivate you to sip from it often.
2. Eat plenty of fruits and veggies especially squashy ones for they contain more water in them
3. Plant an Aloe Vera in your yard and eat from its gel either as a drink or in whatever forms you wish.
4. Avoid exposing yourself directly to the sun, always wear a sunscreen.
5. Apply Aloe Vera on your skin to keep it hydrated.
6. Apply lip balm or Vaseline often to moisten your lips.
7. Make it a habit to wear soft and light cotton clothes rather than thick and silky ones.
8. Keep a bucket of water in your bed room while you sleep, for the fan above your head would extract the moisture in your body.

Hope these steps would aid you to spend off these hot days bit peacefully. Be hydrated and be happy!

Now, coming to the main topic, let me discuss with you regarding some traits we possess but don't bother to get rid of them seriously.

One such trait is being "dishonest". Dishonestly is dangerous. Once we make it our practice to keep lying all the time, Allah records us to be as "Liars" or "the dishonest ones". Once after the recording is done, how hard we try to reform ourselves in to honest ones, it becomes an impossible task. We may realize someday that lying is bad and begin to take steps to get rid of it, yet it would be impossible to fall to the correct track of being honest as Allah has written us to be "dishonest". Hence friends do not lie even if it is for fun and amusement.

The other important trait we forget to care about is being "proud". If lying is dangerous then being proud and haughty is much more dangerous than that. Hope you have heard the hadith stating that anyone if possessed even an atom amount of "pride" would not enter paradise. What is scary regarding this trait is that in the course of being proud, we do not even realize that we are being proud. The best example is of the case where a person with high religious knowledge is being haughty regarding it. He or she would not even realize that he or she possesses that trait until someone points out to him or her.

Stinginess is yet another trait from which we should get rid of immediately. Generousness is encouraged in Islam. Stinginess would not save anything for us but would only steal our happiness. Thus is it important to get rid of this habit right away.

Hence friends let's try our best to remove these traits from us completely and start living a life filled with only positivity. And friends, I repeat, don't forget to stay "Hydrated" :-)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Hadith of the month

Abdullah reported Allah's Messenger (May peace be upon him) as saying: Truth leads one to Paradise and virtue leads one to Paradise and the person tells the truth until he is recorded as truthful, and lie leads to obscenity and obscenity leads to Hell, and the person tells a lie until he is recorded as a liar.

Sahih Muslim – Book 32 Hadith 6307





# *Giggle* a bit:

**Ahmed:** Why was the teacher wearing sunglasses to school?

**Ashrif:** Why?

**Ahmed:** She had bright students!






## Worthier enough to get the love

The soundless tears are rapt
Into the melting heart
You can throw so many arrows
Of your hatred
But my heart will
Stand with that
Until my last breath
Because my love
Is more weightier
Than your hatred for me
You hate me despite
Of the investment of your
Love on earning money
You replaced me by money
In your heart
As I am the kindness
Will never go apart from you
Wherever you go
Because I am the one
Who is worthier enough
To get the love

**SHURFA IFAZATHULLAH**




## "HIM "is the HE

While I was enjoying the sparkling light
That is woven between the fights of water
Felt a warmth in a peaceful coolness
Suddenly all of my nerves wrecked
Because of the thought of him
'Him ' is the he
'He ' is the money
Everyone leaves their
Kith and kin
Because of him
Bloods relations are going for away
Material possessions become the breath of everyone
Because of the demand for him
They worship him
Instead of their creator
And become so obedient
Slave in front of him
They think he is everything
He will come until their
Ultimate moment
But the truth is different............!!!

**SHAFA ABAJULFAN**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# MY FAVOURITE BOOK

I have read many books during the past years, but "TREASURE ISLAND" by R.L. STEVENSON is the book I like most. It tells us of the adventures of a young boy called Jim Hawkins whose father was the proprietor of an inn called admiral benbow. He gets the map of a small island in which treasure has been buried by a sea robber. This map with all directions to the place where the treasure is buried is left by an old sailor called Billy bones in the inn where the old seaman was staying for some time and had died from a stroke. Many pirates who had been with the sea-robber at the time the treasure was buried were also searching for the map. They travel disguised with jim and two men who go to search for the treasure- Dr.livesey and squire Trelawney. The story describes the mutiny of the pirates and how they were all killed at the end and how the treasure was brought to England.

It is essentially a boy's story. There are no women characters in the story. There are very many interesting adventures and the hero of the story is the boy. Jim Hawkins. It is he who is mainly the cause of the finding of the map. It is he who saves the ship hispaniola for the honest men. It is he who overhears the talk of mutiny among the pirates and gives timely warning.

There is the finely- drawn out character of the one - legged long john silver. He is a character whom we can never forget. He is a robber and he is one of the pirates. But in the end for saving his life and that of the boy Jim Hawkins he joins the honest men and saves them from the mutineers who had been reduced to a very few men. He is a character whom we can never hate. Then we have the character of ben gunn, the marooned sailor. He is a very interesting character. On the whole it is a very interesting book.

**Asma Jazahir**

**12 Arts**

**Amina Girls National School**

I'm eagerly waiting for your contributions with comments, stories, poems and essays. The best ones will be published insha Allah.

So write to me at

## I learn every day

A 61/ 5 ,
Zahira Road, Mawanella

Or

Mail me to
aharamenglish@gmail.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதியின் இல்லம் புரூணை

# BRUNEI

## (BRUNEI DARUSSALAM)




**அறிமுகம்**

தென்கிழக்காசியாவின் செல்வந்த நாடுகளில் புரூணை முதலிடம் வகிக்கிறது. சிறந்த கல்வி அறிவு உள்ள நாடாகவும் இது அடையாளப்படுத்தப் படுகிறது. மக்களிடம் வரி அறவிடப்படுவதில்லை. சுகாதாரம், கல்வி போன்ற முக்கிய சேவைகள் மக்களுக்கு இலவசமாகவே கிடைக்கிறது. இலங்கை - இந்தியாவுக்கிடையில் ''கச்சதீவு'' சம்பந்தமாக இழுபறி நிலை உள்ளது போல் இந்நாட்டிற்கும் மலேசியாவுக்குமிடையில் ''லிம்பாங்'' (Limbang) எனும் பிரதேசம் சம்பந்தமாகவும் இழுபறிநிலை தொடர்கிறது.

**எல்லைகள்:**

போர்ணியோத் தீவுக்கு வடக்குப் பக்கம், தென் கிழக்கு ஆசியா. வடக்கு - தென் சீனக் கடல் தெற்கு, கிழக்கு, மேற்கு - மலேசியாவின் சரவாக் மாநிலம் (Sarawak)


**இனம், மதம்**

புரூணை நாட்டில் மலாய் இனத்தவர் 66 வீதம், சீனர் 11.2 வீதம், பழங்குடியினர் 3.4 வீதம் என்ற அடிப்படையில் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர். மக்கள் பெரும்பான்மையாக பின்பற்றும் சமயம் இஸ்லாமாகும். 67 வீதமான மக்கள் இஸ்லாத்தையும், 13 வீதம் பௌத்த சமயம், 10 வீதம் கிறிஸ்தவ சமயமும் மக்களால் பின்பற்றப்படுகிறது.

**பொருளாதாரம்**

அரிசி, காய்கறி, பழங்கள், கோழி, முட்டை, ஆடுகள், இறைச்சிக்கான மிருகங்கள் என்பன முக்கிய விவசாய உற்பத்திகளாகும். எரிவாயு, பெற்றோலியம் போன்ற கனியங்கள் நிறைவாக காணப்படுகிறது. ஜப்பான், இந்தோனேசியா, தென்கொரியா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு மசகு எண்ணெய் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்நாட்டின் 90% வருமானம் பெற்றோலிய ஏற்றுமதி மூலமே கிடைக்கிறது.





அரசர் (சுல்தான்)
: ஹசன்னால் போல்கியா
(Hassanal Bolkiah)

| | |
|---|---|
| **தலைநகரம்** | **: பண்டார் சேரிபேகவான் (Bandar Seri Begawan)** |
| **பரப்பளவு** | **: 5,765 சதுரகிலோ மீற்றர்கள்** |
| **சனத்தொகை** | **: 401,890 (2011 மதிப்பீடு)** |
| **சுதந்திரம்** | **: பிரித்தானியாவிடமிருந்து 01.01.1984** |
| **அலுவலக மொழி** | **: மலாய்** |
| **கல்வியறிவு** | **: 92.7 %** |
| **ஆயுட்காலம்** | **: ஆண்கள்: 73.9 வருடங்கள் பெண்கள்: 78.5 வருடங்கள்** |
| **நாணயம்** | **: புரூணை டொலர் (BND)** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# සිංහල පිටුව


**එම්.එස්.එම්. බජ්ජාන් (Dip in Teaching)**
**ඩී. එස්. සේනානායක විද්‍යාල**
**කොළඹ 07**




## මිනිසා සහ පරිසරය

උසස් මනසක් ඇති පුද්ගලයා මිනිසා ලෙස හැඳින්වේ. එමෙන්ම අප අවට ඇති වටපිටාව පරිසරයයි. පරිසරයේ පැවැත්මට මිනිසා අවශ්‍ය නොවූවත් මිනිසාගේ පැවැත්මට පරිසරය අත්‍යවශ්‍යයි. මිනිසා සහ පරිසරය අතර සම්බන්ධතාව විමසීමේ දී අතීතය හා වර්තමානය ලෙස කොටස් දෙකකට බෙදා කරුණු දැක්වීමට තරම් වෙනසක් අද වන විට පරිසරය තුළත් මිනිසා තුළත් ඇති වී තිබේ.

අතීතයේ මිනිසා සහ පරිසරය ගජ මිතුරෝය. මිනිසා අතින් කිසිදු හානියක් පරිසරයට නොවී ය. පරිසරයේ පැවැත්මට අනුව මිනිසුන් ජීවත්වීමට හුරු විය. එමනිසා අතීත මිනිසා ඉතා සරල ජීවිතයක් ගත කළේ ය. පරිසරය විසින් මිනිසාට අවශ්‍ය සියලු දෑ සැපයීය. ආහාර, ජලය, ඇඳුම් පැලඳුම්, වාසස්ථාන ඒ අතර ප්‍රධාන ය. මිනිසාද එයට කෘතගුණ වශයෙන් බොහෝ දේ සිදු කළේ ය. ගසක් කපන විට තව ගසක් සිටුවීම, ගොවිතැන් කටයුතුවලදී සතුන්ට වෙනම කොටසක් වෙන් කිරීම, ගස් දේවත්වයෙන් සැලකීම ආදී නොයෙක් දේ තුළින් මිනිසා පරිසරය තෘප්තිමත් කරවීය.

එහෙත් එය අද වන විට හාත්පසින්ම වෙනස් වී ගොසිනි. අතීතයේ මිනිසා හා පරිසරය අතර සබැඳියාව ගිලිහී ගොසිනි. අද සිදුව ඇත්තේ පරිසරයට අනුව මිනිසා හැඩ ගැසීම වෙනුවට මිනිසාට අවශ්‍ය ලෙස පරිසරය හැඩ ගැසීමට සිදු විමයි. එහි ප්‍රතිඵලය අද වනවිට මිනිසුන් භුක්ති විඳින්නේ උන් හිටි තැන් පවා අහිමි කරගනිමිනි. සුනාමි ඇතිවීම, අරණායක කඳු නායයෑම්, මීතොටමුල්ලේ කුණු කන්ද පිපිරීම මිනිස් ක්‍රියාකාරකම්වල අතුරු ප්‍රතිඵලයකි.

පරිසරය ගැන නොතකා ක්‍රියාකිරීම හේතුවෙන් මෙවන් ඉරණම්වලට මිනිසාට මුහුණ දීමට සිදුව ඇත. මෙයින් අවබෝධ කරගත යුත්තේ පරිසරය මිනිසාට නොව මිනිසා පරිසරයට අනුගතවන ක්‍රියාකළ යුතු බවයි. නැතිනම් පරිසරය විසින් මිනිසාට ලැබෙන ප්‍රතිචාර මෙයටත් වඩා දරුණු විය හැකි ය. මිනිසා හා පරිසරය අතර සම්බන්ධය අතීතයේ දී වර්තමානයේදී පැවති හා පවතින ආකාරය මෙලෙස පෙන්වා දිය හැකි අතරම පරිසරය කෙරෙහි මිනිසාගේ අවධානය වඩා වැඩි විය යුතු බව කිව යුතු ය.

උසස් මනසක් ඇත්තා උසස් ලෙසම කටයුතු කළ යුතුය. අතීතයේ මෙන්ම වර්තමානයේ දීත් මිනිසා පරිසරය සමග සුහදශීලීව කටයුතු කළ යුතුය. එවිට ස්වභාව ධර්මය ඊට අවනත වනු නොඅනුමානය.


**ෆහිමා ෆරීද්,**
**බදියුදීන් බාලිකා විද්‍යාලය,**
**මහනුවර.**


## අන්තර්ජාතික දින

### අප්‍රේල්

07 - ලෝක සෞඛ්‍ය දිනය
12 - ලෝක අභ්‍යවකාශ දිනය
22 - ජගත් මිහිතල දිනය
23 - ලෝක පොත් දිනය
25 - ලෝක මැලේරියා දිනය
26 - ලෝක බුද්ධිමය දේපළ දිනය

### මැයි

01 - ලෝක කම්කරු දිනය
03 - ජගත් නිදහස් මාධ්‍ය දිනය
05 - ලෝක පවුල් සෞඛ්‍ය දිනය
08 - ලෝක මව්වරුන්ගේ දිනය
12 - ලෝක හෙද දිනය
15 - ලෝක පවුල් දිනය
31 - ලෝක දුම්වැටි විරෝධී දිනය


**එම් අර්ෂද්,**
**මධ්‍ය මහා විද්‍යාලය**
**පසගමුව**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# සිංහල පිටුව



## ගාලු කොටුව

පෘතුගීසි ජාතිකයන් කුඩාවට ගොඩනගා තිබූ ගාලු කොටුව ලන්දේසීන් විසින් ආරක්ෂක බලකොටුවක් ලෙස ශක්තිමත්ව හා විධිමත්ව ගොඩනගන ලදී, ඒ අනුව ලන්දේසි ගෘහ නිර්මාණ ශිල්පයට අයත් ගොඩනැගිලි සහ පුරාවිද්‍යාත්මක ස්මාරක රැසක් මෙම කොටුව තුළ අදටත් දක්නට ලැබේ. දකුණු මුහුදු තීරයේ දර්ශනීය වටපිටාවක පිහිටි ගාලු කොටුව තුළ ඇත්තේ පෞරාණික ඉදිකිරීම් නිසා 1988 වර්ෂයේ දී එය ලෝක උරුම ලැයිස්තුවට ඇතුළත් කෙරිණි.

**එෆ්. ෆර්හා,**
**කළුතර මධ්‍ය මහා විද්‍යාලය,**
**කළුතර.**




## පොදු සාමාන්‍ය දැනීම

- ලෝක ව්‍යාප්ත වෙබ් (අඅඅ) නිමැවුම්කරු - ටිම් බර්නර්ස් ලී
- රූපවාහිනිය නිමැවුම්කරු - ජෝන් ලොගි බෙයාර්ඩ්
- ගුවන්විදුලිය නිමැවුම්කරු - ගුග්ලිඑල්මො මාර්කෝනි
- වාෂ්ප එන්ජිම නිමැවුම්කරු - ජේම්ස් වොට්
- ගෝබි කාන්තාරය පිහිටියේ - මොංගෝලියාවේ
- ආසියාවේ පිහිටි දිගම ගඟ - යැංසි (චීනය)
- ලොව වැඩිම ජනගහනයක් සිටින නගරය - ටෝකියෝ (ජපානය)
- සාක් සංවිධානයේ සාමාජික රටවල් ගණන - 8
- ලොව උසම ගොඩනැගිල්ල - බර්ජ් කලීෆා (ඩුබායි)
- ලොව විශාලතම භූමි ප්‍රමාණයක් ඇති රට - රුසියාව
- ලොව විශාලතම මහද්වීපය - ආසියා මහද්වීපය
- ලොව විශාලතම සාගරය - පැසිෆික් සාගරය

**සල්මා ෆාතිමා,**
**නිකවැරටිය මධ්‍ය මහා විද්‍යාලය,**
**කුරුණෑගල.**

## අලි ඇත් පරපුර සුරකිමු



අප සොබා දහමෙන් ලබා ඇති සම්පත් අතර අලි ඇතුන්ට ඉතා වැදගත් තැනක් හිමිවේ. අලි ඇතුන් නිසා පරිසරයේ අලංකාරය ඇති වේ. අලි ඇතුන් පිරුණු යාල වැනි අභය භූමියක ඇති සුන්දරත්වය වචනයෙන් විස්තර කිරීම අපහසු ය. පරිසරය අලංකාර කරන, පරිසරයට ජීවය ලබාදෙන මෙම අලි ඇතුන් නොයෙක් හේතු නිසා අද වඳවීමේ තර්ජනයට මුහුණ පා ඇත.

මහා පරිමාණයෙන් වනාන්තර එළි පෙහෙළිවීම, යෝධ සංවර්ධන ව්‍යාපාර ආරම්භ වීම, නව නගර නිර්මාණය වීම, විශාල කම්හල් ගොඩ නැංවීම ආදි හේතු නිසා අලි ඇතුන්ගේ රාජධානි වූ වනාන්තර සීඝ්‍රයෙන් වැනසී යයි.

වනාන්තර නැති වී යාම නිසා අලි ඇතුන්ට වර්ගයා බෝකර ගැනීම ආදි ඔවුන්ගේ පැවැත්මට හේතුවන සියලුම කාර්යයන් නොකළ හැකි තත්වයක් උදා වී ඇත. එම ජාතිය සතු මිලකළ නොහැකි දුර්ලභ වස්තුවක් වන අලි ඇතුන් රැක ගැනීම මුළු මහත් රට වැසියාට අවධානය යොමු කළයුතු කාලය උදා වී ඇත. ඒ නිසා අප අලි ඇතුන් රැක ගැනීමට ක්‍රියා කළ යුතු නොවේ ද?

**ආදිලා අලි,**
**හුමෙස්'රා ජාතික පාසල ,**
**බේරුවල.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ஷெய்க் யூ.எல்.எம். ரிஸ்மி (நளீமி BA, PGDE)
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்



# சந்தர்ப்ப துஆக்களும் இலக்கிய நயமும்

1. மரணித்தவர்களது குடும்பத்துக்கு ஆறுதல் சொல்லும் போது — أَعْظَمَ اللَّهُ أَجْرَكَ وَأَحْسَنَ عَزَائَكَ وَغَفَرَ لِمَيِّتِكَ

   1. ஒத்திசைவான சொற்கள் — أَجْرِكَ , عَزَائَكَ , مَيِّتِكَ
   2. உச்சரிப்பும் ஓசையும் அழகானதாக அமைந்துள்ளது.
   3. சொற் சுருக்கமும் ஆழமான பொருளும் கொண்ட பிரார்த்தனை
   4. ஒரே சொல் மீள இடம்பெற்றுள்ளது.

2. வீட்டுக்குள் நுழையும் போது — بِسْمِ اللَّهِ وَلَجْنَا وَبِسْمِ اللَّهِ خَرَجْنَا وَعَلَى اللَّهِ رَبِّنَا تَوَكَّلْنَا

**இலக்கிய நயம்**

   1. சம வலுத்தன்மை கொண்ட எதிர்ச்சொற்கள் — وَلَجْنَا – خَرَجْنَا
   2. ஒரே சொல் மீள இடம்பெற்றுள்ளது — بِسْمِ اللَّهِ
   3. அதிகமான சொற்களின் இறுதியில் ن நூன், أ அலிப் ஆகிய இரண்டும் இணைந்துள்ளது.

3. பிரயாணத்திலிருந்து திரும்பும் போது — آيِبُونَ تَائِبُونَ عَابِدُونَ لِرَبِّنَا حَامِدُونَ

**இலக்கிய நயம்**

   1. எல்லா சொற்களும் நூனில் (ن) முடிவடைந்துள்ளன.
   2. ஒவ்வொரு சொல்லின் இறுதியிலும் வாவும் நூனும் இணைந்து வந்துள்ளமை
   3. அழகிய ஓசை நயத்தில் செறிந்த பொருள்களை தருகின்றது.

## حِيلَةُ الْغُرَابِ الْعَطْشَانِ

عَطِشَ غُرَابٌ عَطْشًا شَدِيْدًا. فَأَخَذَ يَبْحَثُ عَنِ الْمَاءِ فِيْ كُلِّ مَكَانٍ. وَبَعْدَ مَشَقَّةٍ عَثَرَ عَلَى جَرَّةٍ فِيْهَا مَاءٌ قَلِيْلٌ. وَقَدْ حَاوَلَ أَنْ يَصِلَ إِلَى الْمَاءِ الْمَوْجُوْدِ بِهَا لِلشُّرْبِ. وَلَكِنَّهُ لَمْ يُفْلِحْ. فَأَخَذَ يَجْمَعُ الْحَصَى بِمِنقَارِهِ. وَيُلْقِيْهِ فِيْ الْجَرَّةِ حَتَّى ارْتَفَعَ الْمَاءُ فَشَرِبَهُ بِسُهُوْلَةٍ

காகம் ஒன்ற கடுமையாகத் தாகித்தது . அது எல்லா இடங்களிலும் நீர் தேடியது. கடும் சிரமத்தின் பின்னர் ஒரு குடத்தை கண்டது. அதன் கீழ் கொஞ்சம் நீர் காணப்பட்டது. அதிலிருக்கும் நீரை குடிக்க முயன்றது. எனினும் முடியவில்லை. தனது சொண்டினால் சிறிய கற்களை பொறுக்கி எடுத்து குடத்தினுள்ளே ஒவ்வொன்றாக இட்டது. அதனால் நீர் மேலே உயர்ந்து வந்தது. காகம் இலகுவாக நீரை அருந்திச் சென்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Public Library
Jaffna.

# ரமழான் பற்றிய கவிதை

يَا مَوْسِمَ الْقُرْآنَ – رَمَضَانُ يَا رَمَضَانُ
وَالْخَيْرِ وَالْغُفْرَانِ – أَقْبَلْتَ بِالْبُشْرَى
صُوْمُوْ مَعِي رَمَضَانَ – يَا إِخْوَتِي هَيَّا
لِلْوَاحِدِ الدَّيَّانِ – هَيَّا بِنَا نَعْمَلْ
تَهْدِي إِلَى الْإِيْمَانِ – رَمَضَانُ أَنْوَارْ
بِالذِّكْرِ وَالْإِحْسَانِ – هَيَّا نُحَيِّيْهِ

ரமழானே, ரமழானே
அல்குர்ஆனின் பருவமே
நீ நற்செய்தியோடு வந்திருக்கிறாய்
கூடவே நன்மைகளையும் பாவமன்னிப்பையும்
கொண்டு வந்திருக்கிறாய்
சகோதரர்களே!
விரைந்திடுங்கள் என்னோடு ரமழானில் நோன்பிருங்கள்
எம்மோடு விரைந்திடுங்கள்
நிலையான ஏகனுக்காய் நற்செயல் புரிந்திட
ரமழான் அது ஈமானுக்கு வழிகாட்டும் ஒளிக்கீற்றுக்களாகும்
விரைந்திடுங்கள் திக்ரினாலும் பரோபகாரத்தினாலும்
அதனை நாங்கள் உயிர்ப்பித்திடுவோம்.

## ரமழான் கவிதையின் இலக்கிய நயம்

1. யா! யா! என விழித்துள்ளமை
2. பெரும்பாலான வரிகள் நூன் ஓசையில் முடிவடைந்துள்ளமை
3. எளிமையான சொற்சேர்க்கைகளை கொண்டமைந்துள்ளமை.
4. ஓசை நயம் மிக்கது.
5. ஹய்யா ஹய்யா என இடைக்கிடை வழிப்பு இடம் பெற்றுள்ளது.

## الْبُشْرى நற்செய்தி

ரமழான் பல்வேறு நற்செய்திகளை கொண்டுவந்துள்ளது. நிறைவான நன்மைகளும் பாவமன்னிப்பும் உண்டு

## لِلْوَاحِدِ الدَّيَّانِ


நிலைத்திருக்கும் ஏகனுக்காய் மாத்திரம் தூய எண்ணத்துடன் நற்செயல்கள் புரிதல் வேண்டும்.

## مَازَالَ

| | |
|---|---|
| مَازَالَ الْوَقْتُ مُبَكِّرًا | இன்னும் நேரம் இருக்கிறது |
| مَازَالَتِ الْحَدِيقَةُ بَعِيْدَةً | தோட்டம் இன்னும் தூரத்தில்தான் உள்ளது. |
| مَازَالَ الْمُدَرِّسُ مَشْغُوْلًا | ஆசிரியர் இன்னும் வேலைப்பழுவுடன்தான் இருக்கிறார். |
| مَازَالَ الْجَوُّ حَارًّا | வானிலை இன்று வெப்பமாகவே இருக்கிறது. |
| مَازَالَتِ السَّيَّارَةُ مُتَأَخِّرَةً | வாகனம் வருவதற்கு இன்னும் தாமதமாகிறது. |
| مَازَالَ صَدِيقِي مَرِيْضًا | எனது நண்பன் இன்னும் நோயாளியாக இருக்கிறான் |
| مَازَالَ مُحَمَّدٌ مُدَرِّسًا | முஹம்மத் இன்னும் ஆசிரியராகவே இருக்கிறான். |
| مَازَالَ الْبَحْرُ هَائِجًا وَمَائِجًا | கடல் இன்னும் கொந்தளிப்பாகவே இருக்கிறது. |
| مَازَالَ الطَّقْسُ جَمِيْلًا | காலநிலை இன்னும் அழகாகவே உள்ளது. |
| مَازَالَ الشَّايُ حَارًّا | தேனீர் இன்னும் சூடாகவே உள்ளது. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உலக பாரம்பரிய தினம்

உலகில் ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு பகுதியும் ஒவ்வோர் இனமும் பல்வேறு வகையான பாரம்பரிய பெருமைகளை கொண்டிருக்கின்றன. வளர்ந்துவரும் வேகமான காலத்தில் பாரம்பரியங்களை காப்பதற்காக ஏப்ரல் 18 ஆம் திகதி உலக பாரம்பரிய தினமாக **(World Heritage Day)** அறிவிக்கப்பட்டுள்ளது.

1982 ஆம் ஆண்டு துனிசியாவில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் ஏப்ரல் 18ஆம் நாள் சர்வதேச நினைவிடங்கள் **(International Day for Monuments and Sites)** தினமாக கொண்டாட பரிந்துரைத்தது. அடுத்த ஆண்டு யுனெஸ்கோ நிறுவனம் இதனை அங்கீகரித்தது. இதுவே பின்னாளில் உலக பாரம்பரிய தினமாக மாறியது. இத்தினம் மக்களிடையே தங்களது சமூக கலாசார பாரம்பரியத்தைக் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் கொண்டாடப் பட்டு வருகிறது. இது மேலும் பாரம்பரிய பெருமை கொண்ட இடங்களை பாதுகாக்கவும் அவற்றின் மீது அக்கறை கொள்ளவும் தூண்டுகிறது.


இந்த நாளில் என்ன செய்யலாம் என்று அதே மாநாடு பரிந்துரைத்தது. அதன் படி இந்நாளில்...

- ❖ கட்டிட பெருமைகளைக் கண்காட்சிகள் அமைத்து விவரிப்பது
- ❖ கட்டணம் ஏதுமில்லாமல் இந்த ஒரு நாள் நினைவிடம், அரும் பொருளகம் **(Monument)**, தலங்களுக்கு மக்களை அனுமதிப்பது
- ❖ இந்த நாள் பற்றிய விழிப்புணர்வை ஊடகங்கள் மூலம் மக்களுக்குத் தெரிவிப்பது
- ❖ பொது இடங்களில் விவாதங்கள் நடத்துவது
- ❖ புத்தகங்கள்,தபால் தலை முத்திரைகள் **(Stamps)** போன்றவற்றை அச்சிடுவது
- ❖ பாரம்பரியத்தை காப்பாற்றியவருக்கு சிறப்பு பரிசுகள் வழங்குவது
- ❖ பள்ளி மாணவர்கள் மத்தியிலும் இளைஞர்கள் மத்தியிலும் நிகழ்ச்சிகள் நடத்துவது என்று சில பரிந்துரைகளை வழங்கி உள்ளது.

இதில் எந்த அளவு நம் உள்ளூர் யுனெஸ்கோ நிறுவனம் பணி செய்கின்றது என எந்த செய்தியும் இல்லை. அவர்களுக்காக நாம் காத்திருப்பதும் சரியில்லை. இவை அல்லாமல் எந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முறையிலேனும் நம் பாரம்பரியத்தைக் காக்கவும், அதன் பெருமைகளை அடுத்த தலைமுறைக்கு எடுத்து செல்லவும் உதவுமாயின் அனைத்தும் வரவேற்கத் தக்கதே!

சில சமயம், சில முறைகள் மனித நலத்திற்கே பெரும் கேடாக விளைகின்றது. அவற்றை களைந்து உண்மையிலேயே எக்காலமும் பெருமை கொள்ள கூடிய பாரம்பரியத்தையும் மரபுகளையும் காப்போம். உலக பாரம்பரிய தினத்தில் நினைவிடங்கள், அரும் பொருளகங்கள் என்று நின்றுவிடாமல் பாரம்பரிய கலைகள், மொழி வளம், வாழ்க்கை முறை என்று விரிவடைய வேண்டும்.

ஒரு நாட்டுக்கு அழகும் பெருமையும் சேர்ப்பது அதன் பழங்கால நினைவுச் சின்னங்கள், கல்வெட்டுக்கள், ஓவியங்கள் மற்றும் சிற்பங்களே.

**அழிவின் விளிம்பில்...**

மனித இனத்துக்கே பொதுவானவை இயற்கை வளங்கள். ஆனால் கவனிப்பாரற்று இந்த பழங்கால நினைவுச் சின்னங்கள் அழியும் அபாயத்தில் உள்ளன.

**விழிப்புணர்வு தேவை...**

உலகின் மிக முக்கிய நினைவுச் சின்னங்களை பாதுகாக்க யுனெஸ்கோ உள்ளிட்ட அமைப்புகள் முயற்சி செய்து வருகின்றன. நினைவுச் சின்னங்களை பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகத்தான் உலக பராம்பரிய தினம் கடைபிடிக்கப்படுகிறது.

**இலங்கையிலுள்ள உலக பாரம்பரியக் தலங்கள்**

தற்போது, இலங்கையில் எட்டு இடங்கள் யுனெஸ்கோவினால் உலக பாரம்பரியக் தலங்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில் ஆறு பண்பாட்டுக் தலங்களாகவும் இரண்டு இயற்கைக் தலங்களாகவும் விளங்குகின்றன.

1. பண்டைய புனித நகரமான அனுராதபுரம்
2. தங்கக் கோயில், தம்புள்ளை
3. புனித நகரம் கண்டி
4. பண்டைய நகரமான பொலன்னறுவை
5. பண்டைய நகரமான சீகிரியா
6. காலியின் பழைய நகரமும் அதன் கோட்டைகளும்
7. சிங்கராஜ வனம்
8. இலங்கையின் மத்திய உயர்நிலங்கள்

**சிந்தனைக்கு...**

இலங்கையை பொறுத்தவரை தொன்மை மிகு வரலாற்றுச் சிறப்பம்சங்களைக் கொண்ட நாடாகும். பௌத்த நாடாக காணப்படுகிறது. பௌத்தர்களால் மதிக்கப்படுகின்ற கண்ணியப்படுத்தப்படுகின்ற பல இடங்கள் இங்கு காணப்படுகின்றன. அவை தொடர்பாக சட்டங்களும் கடுமையாக உள்ளன. அண்மையில் சுற்றுலாச் சென்ற சில மாணவர்கள் தொடர்பாக எழுந்த பிரச்சினை நாம் அனைவரும் அறிந்ததே.

பாடசாலைகளில் இது தொடர்பான அறிவு, தெளிவு மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். நாட்டின் வரலாற்றுத் தொன்மைகள் தொடர்பாக அறிவுறுத்தப்பட வேண்டும். இவ்வாறான இடங்களுக்கு சுற்றுலா செல்வதில் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அவ்வாறு முடியாதுவிடின் அது போன்ற இடங்களுக்கு சுற்றுலாச் செல்லாதிருப்பதே சாலச் சிறந்தது.

உலக பாரம்பரிய தினம் ஏப்ரல் 18 ஆம் திகதி கொண்டாடப்படுகிறது. இதனை முன்னிட்டு எமது நாட்டின் நிலை இங்குள்ள பாரம்பரிய இடங்கள் தொடர்பாக விழிப்புணர்வுகளை பாடசாலைகளில் ஏற்பாடு செய்யலாம். இது தொடர்பாக பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் முனைப்புடன் செயற்பட்டால் சிறந்த பயன்களை அடையலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதை

# APRIL FOOL

ரிபா பின்த் ராபி
இஸ்லாஹியா பெ.அ.க.



அது ஓர் அழகிய அந்திமாலைப் பொழுது. சுலைம் தன் அலுவலக அறையில் பரபரப்பாக எதையோ தேடிக் கொண்டிருந்தான். வெளியே விளையாடிக் கொண்டிருந்த தன் குழந்தையின் அழுகுரல் கேட்டு முற்றத்திற்கு ஓடிவந்த சுலைம் திடுக்கிட்டு நின்று விட்டான். அவனது ஐந்து வயதுக் குழந்தையை பனைமர உயரத்தில் நீண்ட தாடியும் மீசையும் கொண்ட கரிய மனிதன் ஒருவன் துரத்தி வந்து கொண்டிருந்தான். அவன் தோற்றம் பார்ப்பதற்கு அசல் பைத்தியம் போன்றே தோற்றமளித்தது. திடீரென செயல் வேகம் வந்தவனைப் போல சுலைம் ''எய்! விடு குழந்தைய'' என கத்தியவாறு அந்த மனிதனுக்கருகில் சென்றான். அவனது முகத்தை தன் கூர் விழிகளால் உற்று நோக்கிய சுலைம் அதிர்ந்தே போனான்.

''நீ... நீங்க பஸ்மில்தானே!'' இவன் கூறி முடிப்பதற்குள் சுலைமைக் கண்ட அந்த மனிதன் முற்றத்தைத் தாண்டி வெளியே ஓட, சுலைமும் விடாமல் அவன் பின்னே வேக நடையில் பின்தொடர்ந்தான்.

❖ ❖ ❖ ❖

சுலைம் உயர்தர மாணவன். பஸ்மிலும் அவனுடன் அதே வகுப்பிலே கற்றுக் கொண்டிருந்தான். படிப்பில் அதி கெட்டித்தனத்துடன் விளங்கிய அநாதை மாணவன் பஸ்மிலுக்கும் சுலைமுக்கும் ஆழ்ந்த நட்பில்லாவிடினும் ஏதோ பாசப்பிணைப்பு இருந்து கொண்டே வந்தது. ஏனைய மாணவர்களிடத்தில் சுலைம் பல சேட்டைகள் புரிந்தாலும் பஸ்மில் விடயத்தில் மட்டும் மிக மரியாதையாகவே நடந்து வந்தான்.

அன்றும் வழமை போல சுலைமின் நண்பர் பட்டாளம் மாமரத்தடியில் அமர்ந்து கொண்டு ஏதோ இரகசிய ஒன்றுகூடலில் மூழ்கியிருந்தனர். ஏப்ரல் 1, உலக முட்டாள்கள் தினத்தை முன்னிட்டதாகவே அந்த ஒன்றுகூடல் அமைந்திருந்தது. சுலைமின் நண்பர்களில் ஒருவனான நாதிரே முன்வந்து ''கடந்த ஐந்து வருஷமா ஏப்ரல் 1 ஆம் திகதி ஒவ்வொருத்தரையும் தந்திரமா ஏமாத்திட்டே வந்திருக்கோம்... இந்த முறை அதைவிட கொஞ்சம் கொஞ்சம் வித்தியாசமா பண்ணப் போறோம்'' எனக் கூறி தன் திட்டத்தை விபரிக்க நண்பர்கள் குழு மகிழ்ச்சியில் குதூகலித்தனர். ஆனால், சுலைமிற்கு மட்டும் இந்தத் திட்டத்தில் அவ்வளவாக விருப்பமிருக்கவில்லை. அதுவும் இந்த நாடகத்திற்கு அப்பாவிப் பையன் பஸ்மிலைத் தேர்வு செய்ததில் சுலைமிற்கு துளியளவும் உடன்பாடில்லைதான் என்ற போதும் நண்பர்களை மீறி அவனால் எதையும் பேசிவிட முடியாது போக, சற்று தயக்கத்துடனே தன் சம்மதத்தைத் தெரிவித்தான்.


❖ ❖ ❖ ❖

அன்று ஏப்ரல் முதலாம் திகதி...

ஆழ்ந்த யோசனையுடனே பஸ்மிலின் செல்லிற்கு தொடர்பை ஏற்படுத்தினான் சுலைம், ''பஸ்மில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நான் ஒரு ஆபத்துல இருக்கேன்டா, நான் ஊருக்கு வெளிய இருக்கிற பாழடைந்த மண்டபத்தில வந்து மாட்டிக்கிட்டேன், ரொம்ப பயமா இருக்கு என்ன வந்து காப்பாத்து, இல்லாட்டி என் உயிர்...'' என்று உண்மையில் பேராபத்தில் சிக்கிக் கொண்டிருப்பவன் போன்ற பாவனையுடனே கூறி முடித்துவிட்டு தொடர்பை துண்டித்தான் சுலைம்.

சுலைமின் குரலில் பரபரப்பைக் கண்ட பஸ்மிலும் நிலைமை விபரீதம் என எண்ணி அந்த பாழடைந்த மண்டபத்திற்கு விரைந்தான். இயல்பிலேயே பயந்த சுபாவம் கொண்ட பஸ்மில், திகிலுடன் அந்த வீட்டிற்குள் நுழைந்த நொடியே கறுப்பு முகமுடி அணிந்த நிஜப் பேயின் தோற்றத்தில் பல பயங்கரமான உருவங்கள் முன்னும் பின்னுமாக நின்று பஸ்மிலை பயமுறுத்த, பெருத்த கூச்சலுடன் மயக்கம் போட்டு விழுந்தான்.

பஸ்மிலின் ஓலம் கேட்டு வீட்டைச் சூழ்ந்த அயல் ஊர்வாசிகளிடமிருந்து தப்பிக்க எண்ணிய சுலைமும் அவன் நண்பர்களும் பஸ்மிலை விட்டுவிட்டு அவ்விடத்தை விட்டும் அகன்றனர். அதன் பிறகு பஸ்மிலை அவர் மாமா கொழும்பு அழைத்துச் சென்ற செய்தி தவிர்த்து அவன் பற்றி வேறு எதனையும் கேள்விப்படவில்லை.

❖ ❖ ❖ ❖

சிந்தனை தெளிந்த சுலைம், எதிரே எதிர்பட்ட பெரியவரிடம் பஸ்மில் பற்றி விசாரிக்க, ''பாவம் அந்தப் பையனுக்கு மனநிலை சரியில்ல தம்பி, அதோ முன்னால இருக்கிற குடிசைலதான் அவன் வீடு'' என்ற பெரியவரின் பதிலால் சுலைமின் முகத்தில் அதிர்ச்சி ரேகை பரவ மீண்டும் அவரிடம், ''ஐயா! அவன் என் இப்படி ஆனானு உங்களுக்கு தெரியுமா?'' என தயங்கித் தயங்கிக் கேட்ட சுலைமிடம் பெரியவர் ''அவன் படிக்கிற காலத்தில பாழடைந்த வீடொன்றுல எதையோ பாத்த பயந்திட்டதா ஊரே பேசிக்கிறாங்க. எல்லாத்தையும் அறிந்தவன் அல்லாஹ்தான்.''

அவர் கூறி முடிக்கும் முன்பே கண் ஓரத்தில் அரும்பிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அந்த வீட்டை அடைகிறான் சுலைம். அந்த வீட்டில் அவன் தனித்தே வாழ்கிறான் என்பதற்கு தூசு படிந்திருந்த அவன் வீடே சாட்சி சொன்னது. வீட்டில் காலடி வைத்து பார்வையைச் சுழல விட்ட சுலைமின் கண்களுக்கு முதலில் தென்பட்டது, பஸ்மிலின் 10 வருடத்திற்கு முன்னுள்ள அந்த டயரிதான். தயக்கத்துடன் மெல்லமாய் புரட்ட அவனைப் பார்த்து புன்னகைத்தது அந்த வசனம்.

''இன்று என் உயிர் நண்பன் பேராபத்தில் சிக்கியிருக்கிறான், என் உயிரைக் கொடுத்தேனும் என் நண்பனைக் காப்பாற்றுவேன், இன்ஷா அல்லாஹ்.''

**அடுத்த இதழில்...**

**முபாரகா மும்தாஸ் (முஸ்லிம் பெ.அ.க.) எழுதிய ''விடியலைத் தேடும் விழுதுகள்'' எனும் சிறுகதை பிரசுரிக்கப்படும். (ஆ-ர்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- Every Journey begins with a single step -

தற்காப்புக் கலைகளைக் கற்பதற்கான ஆர்வம் மாண வர்களிடையே நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அதிலும் குறிப்பாக சீனா, ஜப்பான், தாய்லாந்து ஆகிய நாடுகளில் உருவான தற்காப்புக் கலைகளைக் கற்றுக் கொள்வதில் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை ஆர்வம் காட்டி வருகின்றனர். அந்த வகையில் தனிச் சிறப்புப் பெற்ற கிக் பொக்சிங் என்ற தற்காப்புக் கலையில் இளம் வயதில் சாதித்த சிறுவன் பஷாம் முர்தஸா உடனான நேர்காணல். இந்நேர்காணலுக்கு சாதனையாளரின் பெற்றோரும் இணைந்தே பங்கெடுத்தனர்.

**World Martial Art Association** நிறுவனத்தினால் இலங்கையில் ஆகக் குறைந்த வயதுடைய கிக் பொக்சிங் வீரராக செல்வன் பஷாம் முர்தஸா பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். பஷாம் முர்தஸா கிக் பொக்சிங் உடன் மட்டுமல்லாமல் சிறந்த மேடைப் பேச்சு ஆங்கில மொழி அறிவு, மார்க்க சொற்பொழிவு, சித்திரம் வரைதல் என பல இதர செயற் பாடுகளிலும் சிறந்து விளங்குகிறார். இளம் சாதனையாளர் பஷாம் முர்தஸா அவர்களின் சாதனைகளை **bassam murthasa-young hero** என்ற அவரது முகநூல் பக்கத்திலும் **youtube chanel** இலும் பார்வையிடலாம்.

# எனது ஹீரோ எனது தந்தையே

## இளம் வயதில் சாதித்த சிறுவன் பஷாம் முர்தஸா

✍ **ஸஹீம் கமால்**



**அகரம்: உங்களைப் பற்றியதோர் அறிமுகம்**

**பஷாம் முர்தஸா:** நான் சதாக் அலி முர்தஸா - எம்.வை.எம். ஹஸ்னா தம்பதியினரின் மூன்று பிள்ளைகளில் இரண்டாமவர். மாவனல்லை பிரதேசத்தில் வசிக்கின்றோம். தற்போழுது **Good Hope College** இல் **LKG** கற்கின்றேன். மதீனா சர்வதேசப் பாடசாலையில் **LKG** கற்கும் போதே கிக் பொக்சிங் கலையையும் கற்க ஆரம்பித்தேன்.

**அகரம்: இலங்கையில் ஆகக் குறைந்த வயதுடைய கிக் பொக்சிங் வீரராக தெரிவு செய்யப் பட்டுள்ளீர்கள். அது குறித்து...**

**பஷாம் முர்தஸா:** நான் மூன்றரை வயதாக இருக்கும்போது எனது தந்தை கிக் பொக்சிங் கலையில் என்னை இணைத்து விட்டார். மிகவும் ஆர்வத்துடன் பங்குபற்றினேன். நான்கு வயதில் **World Martial Art Association** நிறுவனத்தினால் இலங்கையில் ஆகக் குறைந்த வயதுடைய வீரனாக தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டேன். இந்நிகழ்வு எனக்கு மிகப் பெரிய உற்சாகத்தை வழங்கியது. இது வரை **Yellow, Orange belt** களைப் பெற்று அடுத்த கட்டத்திற்கு நகரவுள்ளேன்.

**அகரம்: அநேகமானோர் விளையாட்டை கற்றலுக்கு தடையாகவே பார்க்கின்றனர். விளை யாட்டில் சிறந்து விளங்கும் நீங்கள் கற்றலிலும் சிறந்து விளங்குகின்றீர்கள். இது தொடர்பாக...?**

**பஷாம் முர்தஸா:** வாழ்க்கை என்பது ஒரு கலை. அதில் வாழப் பழகுவது தனிக்கலை. கிக் பொக்சிங் இனை நான் ஒரு விளையாட் டாக பார்க்கவில்லை. எனது வாழ்வின் ஓர் அங்கமாகப் பார்க்கிறேன். கற்றல் வேறு கிக் பொக்சிங் வேறு என பிரித்துப் பார்க்க வில்லை. இரண்டையும் வாழ்வுக்கு தேவையான கலையாகவே பார்க் கிறேன். எனது பெற்றோர் இது தொடர்பாக என்னை நிறையவே வழிகாட்டுகின்றனர். இரண்டிலுமே சிறந்த முறையில் பங்கு கொள்ள என்னை ஊக்கப்படுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கின்றனர். அவர்களின் ஊக்கம்தான் இரு துறைகளிலும் என்னை சமநிலை பேண உதவுகிறது.

**அகரம்: உங்கள் இலட்சியம் என்ன?**

**பஷாம் முர்தஸா:** சர்வதேச அளவில் கிக் பொக்சிங் வீரராகத் திகழ வேண்டும். அத்துடன் மிகச் சிறந்த விண்வெளி வீரராக வரவேண்டும். இன்று இளைஞர்கள் தமது நேரங்களை வீணாகக் கழிக்கின்றனர். வாழ்வில் எந்த இலட்சியமும் இல்லாமல் சுற்றித் திரிகின்றனர். இன்றைய சிறார்களுக்கும் இளைஞர்களுக்கும் மிகச் சிறந்த முன்மாதிரியாக செயற்பட விரும்புகிறேன்.

**அகரம்: உங்களைப் போன்ற மாணவ சமூகத்திற்கு நீங்கள் சொல்ல விரும்பும் செய்தி...?**

**பஷாம் முர்தஸா:** வாழ்வில் ஏதாவதோர் இலட்சியம் இருக்க வேண்டும். விளையாட்டே இலட்சியமாக இருக்கலாம். இலட்சியம் விளையாட்டாய் இருக்கக் கூடாது. நீங்கள் எதை செய்தாலும் விருப்பத்துடன் செய்யுங்கள். அதில் உச்சம் தொடுவீர்கள். பெற்றோரை கண்ணியப்படுத்துங்கள். அவர்களை சிறந்த முன்மாதிரியாக கொள்ளுங்கள். அதில்தான் இறைவனின் பொருத்தமும் உங்கள் வெற்றியும் உள்ளது. எனது ஹீரோ எனது தந்தையே.


**அகரம்: இத்தருணத்தில் யாருக்கெல்லாம் நன்றி கூற விரும்புகின்றீர்கள்?**

**பஷாம் முர்தஸா:** முதலாவதாக அல்லாஹ்விற்கே எல்லாப் புகழும். அவனின் அருள்தான் அனைத்திற்கும் மூலதனம். World Martial Art Association நிறுவனத்தின் நிறுவுனர் கிராண்ட் மாஸ்டர் எம்.எச்.எம். இக்பால் அவர்களுக்கு முதன்மை நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன். அதே போன்று என்னை அழகிய முறையில் பயிற்றுவிக்கும் எனது மாஸ்டர் எம்.எச்.எம். பாஹித் அவர்களுக்கும் நன்றிகள். என்றும் என்னை ஒரு கதாநாயகனாக கற்பனை செய்து அதற்காக பல தியாகங்கள் செய்து கொண்டிருக்கும் அன்பு பெற்றோர் சதாக் அலி முர்தஸா- எம்.வை.எம். ஹஸ்னா ஆகியோருக்கும் நன்றி தெரிவிக்கின்றேன்.

**தந்தை சதாக் அலி முர்தஸா கூறும்போது...**

ஒரு குழந்தையை பொறுத்தவரை ஒன்று முதல் ஐந்து வரையான காலம் மிகவும் முக்கியமானது. அந்த வயதில் அந்த குழந்தைக்குத் தேவையான பண்புகள் சிறந்த நடத்தை திறன் விருத்தி சார்ந்த அம்சங்கள் என்பன சரியாக வளர்க்கப்பட வேண்டும். நாம் குழந்தைகளுக்கு வழங்குகின்ற சரியான வழிகாட்டலில்தான் அவர்களின் ஆளுமைகள் வெளிப்படுகின்றன. ஆனால் இன்று பெற்றோர் கையடக்கத் தொலைபேசியுடனும் தொலைக்காட்சியுடனும் காட்டூன் மற்றும் வீடியோ கேம்ஸ்களுடனும் குழந்தைகளின் ஆளுமைகளை முடக்கி விடுகின்றனர். குழந்தைகளின் குறும்புத்தனங்களை சமாளிப்பதற்கு வழியாக பெற்றோர் இதனை நினைக்கின்றனர். இது மிகவும் ஆபத்தானது.

பஷாம் முர்தஸாவைப் பொறுத்தவரை அவர் மிகவும் உற்சாகமானவர். அவர் இரண்டரை வயதாக இருக்கும்போதே கிக் பொங்சிக் இல் அவரை இணைத்து விட்டோம். வீட்டிலும் கூட தனது ஓய்வு நேரத்தை வீணாக கழிக்க மட்டார். மிக சிறந்த முறையில் பயன்படுத்துவார். இவரது உற்சாகத்தையும் திறமையையும் கண்டு தரம் ஐந்தில் படிக்கும் இவரது சகோதரி மர்யம் முர்தஸாவும் இளைய சகோதரர் இம்தாத் முர்தஸாவும் கிக் பொக்சிங்கில் ஈடுபடுகின்றனர். இவர்களைக் கண்டு மாவனல்லையில் கிக்பொக்சிங்கில் ஈடுபடும் பிள்ளைகளும் அதிகரித்துள்ளன. இதையிட்டு பஷாம் முர்தஸாவின் பெற்றோரான நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.




Public Library
Jaffna.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆசியா விளையாட்டுப் போட்டியில் மீண்டும் கிரிக்கெட்

எதிர்வரும் 2022ஆம் ஆண்டு சீனாவின் ஹாங்ஜோவ் நகரில் நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் கிரிக்கெட் விளையாட்டு இணைத்துக் கொள்ளப் பட்டுள்ளதாக ஆசிய ஒலிம்பிக் சம்மேளம் உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது. ஒலிம்பிக் போட்டிகளுக்கு அடுத்த மிகப் பெரிய விளையாட்டு திருவிழாவான ஆசிய விளையாட்டு விழா நான்கு வருடங்களுக்கு ஒரு முறை நடத்தப்படுகிறது. இதன் 19 ஆவது அத்தியாயம் எதிர்வரும் 2022 ஆம் ஆண்டு சீனாவில் நடைபெற வுள்ளது. இதற்கு முன் 2010 மற்றும் 2014 ஆம் ஆண்டு களில் நடைபெற்ற ஆசிய விளையாட்டு விழாவில் கிரிக்கெட்டும் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தது. இதன்பின் சர்வதேச போட்டிகளை காரணம் காட்டி இந்திய கிரிக்கெட் சபை ஆசிய விளையாட்டு போட்டி களுக்கு அணியை அனுப்பவில்லை. இதனால், கடந்த வருடம் இந்தோனேஷியாவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டு போட்டிகளில் இருந்து கிரிக்கெட் நீக்கப் பட்டது.

இதேவேளை, கிரிக்கெட் விளையாட்டை உலகம் முழுவதும் பிரபல்யப்படுத்தும் நோக்கில் 2028ஆம் ஆண்டு அமெரிக்காவின் லொஸ் ஏன்சல்ஸ் நகரில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளில் கிரிக் கெட்டை இணைத்துக் கொள்வதற்கு ஐ.சி.சி முயற்சித்து வருகின்றது.

அதேபோல, 2022 ஆம் ஆண்டு இங்கிலாந்தின் பெர் மிங்ஹமில் நடைபெறவுள்ள பொதுநலவாய விளை யாட்டில் மகளிருக்கான டி-20 போட்டியை இணைத்துக் கொள்ள ஐ.சி.சி. ஏற்கனவே விண்ணப்பித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.



விரைவு - உயர்வு - துணிவு

# கிரிக்கெட்டில் அறிமுகமாவுள்ள புதிய விதிமுறைகள்!

MARYLEBONE CRICKET CLUB FOUNDATION

டெஸ்ட் கிரிக்கெட்டில் பல மாற்றங்களை கொண்டு வருவதற்கு எம்.சி.சி. **(Marylebone Cricket Club)**, ஐ.சி.சி. யிடம் சில பரிந்துரைகளை முன்வைத்துள்ளது. கிரிக் கெட் ஆட்டங்களில் விதிமுறைகளை மாற்றுவதிலும், புதிய நுணுக்கங்களை புகுத்துவதிலும் லண்டனை மையமாக கொண்டு செயல்படும் எம்.சி.சி. உலக கிரிக் கெட் குழு முக்கிய பங்கு வகிக்கிறது.

**1 நேரத்தை கணக்கிட ஸ்கோர் போர்டில் எலக்ட்ரோனிக் கடிகாரம்**

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் தாமதமாக பந்து வீசும் புகார் அதிகமாக எழுகிறது. இதை கவனத்தில் கொண்டு நேரத்தை கணக்கிட ஸ்கோர் போர்டில் எலக்ட் ரோனிக் கடிகாரம் பொருத்தப்படும். இதன் மூலம் ஓவர் முடிந்ததும் 45 வினாடியில் இருந்து கவுண்ட்டவுன் ஆரம்பிக்கும். இந்த நேரம், பந்தை எதிர்கொள்ளும் புதிய துடுப்பாட்ட வீரருக்கு 60 வினாடிகளாகவும், மாற்று பந்து வீச்சாளராக வருபவருக்கு 80 வினாடிகளாகவும் அதிகரிக்கப்படும்.

கவுண்ட்டவுன் முடியும்போது துடுப்பாட்டம் அல்லது பந்து வீச்சுக்கு இரண்டு அணி தரப்பினரும் தயா ராக இருக்க வேண்டும். கவுண்ட்டவுன் முடிந்ததும் ஆட்டத்தை தொடங்காவிட்டால் எச்சரிக்கை விடுக் கப்படும்.

அத்துடன் விதிமீறல் தொடர்ந்து நீடித்தால், சம்பந்தப் பட்ட அணியை தண்டிக்கும் வகையில் எதிரணிக்கு 5 ஓட்டங்கள் வழங்கப்படும்.

மேலும் விக்கெட் வீழ்ச்சியின்போதும் இதேநேரம் முறை பின்பற்றப்படும். ஆனால், ஆடுகளத்தில் இருந்து வீரர்களின் ஓய்வறை இருக்கும் தூரத்தை வைத்து இந்த கால அளவில் மாற்றம் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2 நோ-போல் வீசினால் பிரீஹிட்**

ஒரு நாள் போட்டி மற்றும் 20 ஓவர் கிரிக்கெட் போட்டி போன்று டெஸ்ட் கிரிக்கெட்டிலும் நோபால் வீசினால் பிரீஹிட் வழங்கப்பட வேண்டும். "பிரீஹிட்" வழங்கப் படும்போது டெஸ்ட் போட்டிலும் நோ-பால் வீசப் படுவது குறையும்.

**3 ஒரே மாதிரியாக தரமான பந்துகளை பயன்படுத்தல்**

தற்போது டெஸ்ட் கிரிக்கெட்டில் எஸ்.ஜி, கூக்கபுரா, டியுக்ஸ் ஆகிய பந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. அடுத்ததாக உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் ஆரம்பமாக வுள்ளதால் அனைத்து டெஸ்ட் போட்டிகளுக்கும் ஒரே மாதிரியாக தரமான பந்துகளை பயன்படுத்த வேண்டும். இதற்காக டியுக்ஸ் வகை பந்தை பரிந்துரை செய்துள்ளது.

மேற்கண்ட எம்.சி.சி.யின் பரிந்துரைகள் குறித்து ஐ.சி.சி.விரைவில் தீர்மானம் எடுக்கப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது.




# பளு தூக்கல் போட்டியில் சாதனை

ஆசிய பசுபிக் க்ளெசிக் (Classic), எகியுப்ட் (Equipped) மற்றும் பென்ச் ப்ரெஸ் (Bench Press) சம்பியன்ஷிப் பளு தூக்கல் போட்டித் தொடரில், ஆண்களுக்கான எகியுப்ட் பிரிவில் இலங்கை 6 தங்கம் மற்றும் ஒரு வெள்ளிப் பதக்கங்கள் அடங்கலாக ஒட்டுமொத்த சம்பியன் பட்டத்தை வென்று சாதனை படைத்துள்ளது. அவுஸ்திரேலியாவின் கோல்ட் கோஸ்டில் கடந்த மாதம் நடைபெற்ற இந்தப் எகியுப்ட் பிரிவில் சம்பியனாகியுள்ள இலங்கை, வரலாற்றில் முதன் முறையாக சர்வதேச போட்டியொன்றில் ஒட்டுமொத்த சம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்துள்ளது.இலங்கை மகளிர் அணி 4 பதக்கங் களையும் ஆண்கள் அணி 7 பதக்கங்களையும் வென்று சம்பியனாகியுள்ளது.

# ஒலிம்பிக் போட்டிக்கான அடைவு மட்டம் அறிவிப்பு




ஜப்பான் - டோக்கியோவில் 2020 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டித் தொடருக்காக அமைக்கப்பட்ட அடைவு மட்டங்கள் மற்றும் நுழைவுக்கான தரம் என்பவற்றுக்கு சர்வதேச மெய்வல்லுநர் சம்மேளனங்களின் சங்கம் அனுமதியளித்துள்ளது. அதேநேரம், போட்டியிடவுள்ள வீரர்கள் அறிவிக்கப்பட்டுள்ள காலப்பகுதிக்குள் அடைவு மட்டத்தை பூர்த்தி செய்திருக்க வேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது ஒலிம்பிக் தொடருக்கான தகுதிக்காலம் எதிர்வரும் மே முதலாம் திகதி ஆரம்பமாவதுடன், 2020 ஆம் ஆண்டு ஜுன் 29 ஆம் திகதி நிறைவுக்கு வரவுள்ளது. ஒலிம்பிக் போட்டிகளுக்கான அடைவு மட்டம் மற்றும் சர்வ தேச மெய்வல்லுநர் சம்மேளனத்தினால் அறிமுகப் படுத்தப்பட்டுள்ள வீரர்கள் தரவரிசை என இரண்டு முறைகளின் கீழ் வீரர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

### அகரம் சஞ்சிகையின் விலை அதிகரிப்பு

**அதிகரித்துச் செல்லும் உற்பத்திச் செலவு காரணமாக அகரம் இதழ் ஒன்றின் விலை அடுத்த மாதத்திலிருந்து (மே 2019) 60 ரூபாவாக அதிகரிக்கிறது என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகின்றோம். வாசகர்களாகிய நீங்கள் தொடர்ந்தும் உங்களது பங்களிப்பை வழங்குவீர்கள் என எதிர்பார்க்கின்றோம். (ஆ-ர்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முளைத் தடைகளை உடைத்தெறி. அதுவே முன்னேற்றத்தின் எதிரி...

## MOTIVATIONAL STORY - 13

எம்.எஸ்.எம். நுஸ்ரி (நளீமி, BA)
பணிப்பாளர், பிஸ்மி கிண்டகாடன், காத்தான்குடி



''மூளைத் தடைகளை உடைத்தெறி. நம்பிக்கையை மட்டும் இழந்து விடாதே. இலக்கை எட்ட ஆரம்பத்தில் என்ன முயற்சி எடுத்தாயோ இப்போது அதை விட அதிக முயற்சி எடு.''

அமீனா நகரத்தில் ஒன்பதாம் தரத்தில் கற்கும் முனீப் திறமையான மாணவன். ஆனால், அண்மைக் காலமாக கணிதத்தில் அவனால் சிறந்த புள்ளிகளைப் பெற முடியவில்லை. எல்லாப் பாடங்களிலும் தொண்ணூறு புள்ளிகளுக்கு மேல் பெறும் முனீப் கணிதத்தில் முப்பது புள்ளிகள் பெறுவதால் வகுப்பில் முன்னிலை வகிக்கமுடியவில்லை. இதனால் அவன் கவலைப்பட்டான். முனீபின் பெற்றோரும் வருத்தமடைந்தனர்.

ஒருநாள் முனீபின் தந்தை அமீனா நகரத்தில் இருக்கும் மூத்த கணித ஆசிரியர் அமீர் அவர்களிடம் முனீபை அழைத்துச் சென்றார். மகனின் பிரச்சினையை முறையிட்டார். கணிதம் என்றாலே பயப்படுகிறான் என்று வருத்தப்பட்டார். அமீர் ஆசிரியர் கணிதத்தில் மாத்திரம் தேர்ச்சி பெற்றவரல்ல. அவர் பலத்த அனுபவம் மிக்கவர். தன் வழிகாட்டலாலும் ஆலோசனையாலும் பல அறிஞர்களை உருவாக்கியவர். ஊக்கப்படுத்தி உற்சாகப்படுத்தி விடயங்களின் யதார்த்தங்களை நடைமுறை ரீதியில் உணரச் செய்து மாணவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வளிப்பவர். அப்போது அமீர் ஆசிரியர் முனீபை அழைத்து ''முனீப்... உனக்கு கணிதம் கசக்கிறது. அப்படித்தானே! அதற்கு என்ன காரணம்?'' என கேட்டார். என்றார். அதற்கு முனீப் ''சேர்... எனக்கு எல்லாப் பாடங்களும் விளங்குகின்றன. ஆனால், கணிதம் மாத்திரம் என் தலையில் ஏறவேயில்லை. பாடசாலையில் கணிதப் பாடம் சிறப்பாகவே கற்பிக்கப்படுகிறது. ஆனால், எனக்குத்தான் விளங்கவில்லை. என் மூளையில் கணிதம் படிக்கும் ஆற்றல் இல்லை என நினைக்கிறேன். அது மாத்திரமல்ல. அதிகமாக என்னால் படிக்க முடியவில்லை. என் மூளை நிரம்பி விடுகிறது. கணக்குகளை செய்யும்போது எனக்கு தூக்கமே வருகிறது'' என்றான்.


இதனைக் கேட்ட அமீர் ஆசிரியர் ''முனீப்... நீ சொல்லும் இந்தப் பிரச்சினை உன்னைப் போல் பல மாணவர்களுக்கும் இருக்கிறது... உனக்கு கணிதம் கஷ்டமாய் இருப்பது போல் வேறு சிலருக்கு வேறு பாடங்கள். ஆனால், நீ நினைப்பது போலல்ல. உன் மூளை உன்னிடம் கணிதம் எனக்குப் பிடிக்காது என்று சொன்னதா? இல்லைதானே! அப்படியானால் உன் மூளையில் பிரச்சினையில்லை. உன் மூளையின் பலத்தை நீ அறியவில்லை. அல்லாஹ் நமக்கு எவ்வளவு பெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Public Library
Jaffna.

அருட்கொடையாக மூளையை தந்திருக்கிறான். இப்போது உனக்கு நான் உன் மூளையைப் பற்றி சொல்லப் போகும் விடயங்கள் பிரமிப்பை ஏற்படுத் தலாம்... உனது மூளை மிகவும் சக்தி வாய்ந்தது. கிட்டத் தட்ட 1.5 கிலோகிராம் எடை கொண்டது. நமது மூளை யில் உள்ள இரத்த நாளங்களை விரித்து நீட்டினால், 1 லட்சத்து 60 ஆயிரம் கிலோ மீற்றர் தூரத்துக்கு அவை நீளும். மூளை செயல்படும்போது 10 முதல் 23 வாட்ஸ் அளவுக்கு மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது. நமது உடலில் உள்ள இரத்தத்திலும் ஒட்சிசனிலும் 20 சதவீ தத்தை மூளைதான் பயன்படுத்துகிறது. மணிக்கு 431 கி.மீ வேகத்தில் செயல்படக் கூடியது. இவ்வளவு சக்தி வாய்ந்த உன் மூளையால் கணிதத்தைக் கற்க முடியாதா!'' என்றார்.



இதனைக் கேட்ட முனீப் சற்று அதிர்ந்தே போய் விட்டான். இருப்பினும் அவன் விடவில்லை ''சேர்... சக்தி வாய்ந்த மூளையைத் தந்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். ஆனால், இவ்வளவு சக்தியிருந்தாலும் பல பாடங்களை படிக்கும்போது பல விடயங்களை ஞாபகம் வைத்திருப்பது சிரமமானதுதானே! அதிகமான விடயங்களை, கணக்குகளைப் படிக்கும்போது மூளை நிரம்பும்தானே!'' என்றான். அதற்கு ஆசிரியர் ''முனீப்... அப்படியில்லை. நாம் மூளையின் கொள்ளளவில் 1 வீதத்தைக் கூட பயன்படுத்தவில்லை. அதாவது, நமது மூளை ஒரு பெடாபைட் (petabyte) கொள்ளளவு கொண்டது. அதாவது உனக்குப் புரியும் படி சொன்னால் 1,000,000,000,000,000 தகவல்களை உன் மூளையில் சேமிக்க முடியும். இன்னும் உனக்கு விளக்கமாகச் சொன்னால் சுமார் 20 மில்லியன் நான்கு தட்டு கட்டடம் முழுவதும் தகவல்கள் நிரப்பப்படுவது போல... என்ன தலை சுற்றுகிறதா..?'' என்றார். உடனே முனீப் ''மாஷா அல்லாஹ். இப்படியொரு சக்தி வாய்ந்ததா எனது மூளை... அப்படியென்றால் ஏன் என்னால் கணிதப் பாடத் தில் சிறப்பான புள்ளிகளைப் பெற முடியவில்லை...?'' என ஆர்வத்துடன் கேட்டான்.

அதற்கு ஆசிரியர் ''முனீப்... கணிதம் உனக்கு விளங்கா மைக்கு இரண்டே காரணம்தான். ஒன்று கணிதம் உனக்கு விளங்காது என்று நீயே நம்புவது. இரண்டாவது கணிதத்தை புரியும் விதத்தில் கற்காதது... இதனைத் தவிர வேறு காரணம் இருக்க முடியாது. அதாவது நமது மூளைக்கு நாம் போட்டுக் கொள்ளும் தடைதான் நம் முன்னேற்றத்தின் எதிரி. **Brain Block** (மூளைத்தடை) என்பது மிக ஆபத்தானது. நம்மால் முடியாது என நாம் தான் மூளைக்குத் தடை போடுகிறோம். அதுவே காலப் போக்கில் மூளைக்குப் பழகி விடுகிறது. கணிதம் உனக்கு விளங்காது என நீயே உனக்குப் போட்டுக் கொண்ட தடைதான் உனக்கு கணிதம் புரியாமைக்குக் காரணம்'' என்றார்.

பின்னர் ஆசிரியர் தன் வீட்டில் இருந்த ஒரு மீன் தொட்டியில் அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருந்த மீன் களுக்கிடையே ஒரு கண்ணாடியைக் கொண்டு தடுத் தார். அப்போது ஓடிக்கொண்டிருந்த மீன்கள் கண்ணாடி யில் மோதி அடுத்த பக்கம் செல்ல முயற்சித்தன. ஆனால் முடியவில்லை. சில மணிநேரங்களாக அவ்வாறு முயற் சித்தன. பின்னர் முயற்சியைக் கைவிட்டன. கண்ணாடி யில் மோதாமலேயே வந்த பக்கம் திரும்பிச் சென்றன. அப்போது ஆசிரியர் தடையாக இருந்த கண்ணாடியை சிறிது நேரத்தில் எடுத்து விட்டார். என்ன ஆச்சரியம். அப் போதும் மீன்கள் கண்ணாடி இருப்பதாக நினைத்து தொட்டியின் ஒரு பக்கத்தில் மாத்திரமே நீந்திக் கொண்டி ருந்தன. உடனே ஆச்சரியத்துடன் அவதானித்துக் கொண் டிருந்த முனீபைப் பாரத்து ''பார்த்தாயா! அந்த மீன்கள் தொட்டியின் ஒரு பக்கத்துக்கு செல்ல முடியாது என தனக்குத் தானே போட்ட மூளைத்தடை. அதுதான் கண் ணாடியை எடுத்த பின்னரும் அடுத்த பக்கம் செல்ல முடியாது என்று தடுத்தது. இவ்வாறுதான் நீயும். ஒரு முறை ஒரு கணக்கு விளங்கவில்லை என்பதற்காக கணி தமே விளங்காது என்று தடைபோட்டுக் கொண்டாய். ஒரு முறை விளங்காவிட்டால் மறுமுறை முயற்சி. மறுமுறையும் விளங்காவிட்டால் இன்னும் இருமுறை முயற்சி. அதுவும் விளங்காவிட்டால் நூறுமுறை என்றாலும் முயற்சி செய். மூச்சு நிற்கும் வரை முயற்சி நிற்கக் கூடாது. புரியாத கணக்கை புதிராக எடுக்காதே. சவாலாக எடு. முடியாதது என்று எதுவுமே இல்லை'' என்றார்.

36ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தரம் 6-11
தொடர் : 38

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்

எம்.எப்.எம். பாஹிம் B.A, PGDE (Merit),RICTP,MEd
(ஆசிரிய ஆலோசகர்)
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்

பாடம் - 34

# கோப்பு முகாமைத்துவம்

கணினி வன்தட்டு தகவல்களை சேமித்து வைப்பதற்கும் அவற்றை தேவையானபோது மீண்டும் பெற்றுக் கொள்வதற்கும் ஏற்றாற்போல் வடிவமைக்கப்பட்டுள்ளது. வன்தட்டில் சேமிக்கப்படும் தகவல்கள் ஒழுங்கு முறையில் சேமிக்கப்படல் வேண்டும். அப்போதுதான் தேவையானபோது நேர விரயம் இன்றி அவற்றைத் தேடிப் பெற்றுக் கொள்ள முடியும்.

**வன்தட்டில் தகவல்களை சேமிக்கும்போது கவனத்திற் கொள்ள வேண்டிய முக்கிய விடயங்கள்.**

01. எந்த செலுத்தியில் (Drivers) சேமித்து வைப்பது என்பதைத் தீர்மானிப்பது
02. ஒவ்வொரு கோப்புக்கும் (File), கோப்புறைக்கும் (Folder) பொருத்தமான பெயரை இடுவது.

கணினியில் கோப்புக்களையும் கோப்புறைகளையும் பணிசெயல் முறைமையே முகாமை செய்கின்றன. எனவே, பயனர் பணிசெயல் முறைமைக்குச் சரியான கட்டளைகளை வழங்குவதன் மூலம் கோப்புக்களையும் கோப்புறைகளையும் பயனர் விருப்பின்படி முகாமை செய்து கொள்ள முடியும். அவற்றை பின்வருமாறு நோக்க முடியும்:

01. கோப்பு, கோப்புறை தொடர்பான செயற்பாடுகளை மேற்கொள்ளல்

- புதிய கோப்புகளைத் தயாரித்தல்
- கோப்புக்களைச் சேமித்தல்
- கோப்புகளைத் திறத்தல்
- தேவையற்ற கோப்புகளை அழித்தல்
- புதிய கோப்புறைகளை உருவாக்குதல்
- தேவையற்ற கோப்புறைகளை அழித்தல்
- கோப்புகள், கோப்பு உறைகள் ஆகியவற்றுக்கு மீள் பெயரிடல்
- கோப்புகள், கோப்பு உறைகள் ஆகியவற்றின் உருக்களை மாற்றியமைத்தல்
- கோப்புகள், கோப்பு உறைகள் ஆகியன இருக்கும் இடங்களை மாற்றுதல்

02. கோப்பின் நீட்சியை (File Extention) அறிதல்

கோப்புக்களின் நீட்சி என்பது குறித்த கோப்பு எந்தக் குடும்பத்தைச் சார்ந்தது அல்லது எந்த நிரலைச் சார்ந்தது என்பதைக் குறிப்பதாகும். ஒவ்வொரு கோப்பிற்கும் அது எம்மென்நிரல் (Programe) என்பதனை அடிப்படையாகக் கொண்டு அவற்றுக்கே உரிய தனியான கோப்பு நீட்சிகள் காணப்படுகின்றன.

உதாரணமாக நாம் பொதுவாக பயன்படுத்தும் Ms Word .doc எனவும் photoshop .psd எனவும் வீடியோக்கள் .mp4 எனவும் காணப்படும்.

| File Type | Example of Program | Program Extension |
|---|---|---|
| Word Processing | Microsoft Word | .doc |
| Spread Sheet | Microsoft Excel | .xls |
| Database files | Microsoft Access | .mdb |
| Presentation files | Microsoft Power point | .ppt |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| **Image files** | | .gif<br>.jpg<br>.bmp |
| **Audio files** | | .wav<br>.mpeg |
| **Video files** | | avi<br>.mpeg |

*03. கோப்பு,கோப்புறையின் தகவல்களை அறிதல்*

கோப்பு, கோப்புறை பற்றிய தகவல்கள் அவற்றின் Propertise இலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.





- ❖ கோப்பின்,கோப்புறையின் வகை **(Type)**
- ❖ கோப்பு, கோப்புறை அமைந்துள்ள இடம் **(Location)**
- ❖ கோப்பு,கோப்புறையின் பருமன் **(Size)**
- ❖ கோப்பு,கோப்புறைக்காக ஒதுக்கப்பட்டுள்ள பருமன் **(Size on Disk)**
- ❖ கோப்பு,கோப்புறை உருவாக்கப்பட்ட திகதி மற்றும் நேரம் **(Date and Time)**
- ❖ கோப்புறையின் உள்ளடக்கம் **(Contains)** (எத்தனை கோப்புக்கள், கோப்புறைகள் என்பது பற்றி)

*04. கோப்பைச் சேமித்தல்*

கோப்பை சேமிக்கும்போது பயனர் விரும்பிய செலுத்தியில் **(Drives)** புதிய கோப்புறைகளை உருவாக்கி சேமித்துக் கொள்ள முடியும். செலுத்தி எனப்படுவது கணினியில் வன்தட்டு பிரிக்கப்பட்டுள்ள பிரிவுகள் மற்றும் வெளியிலிருந்து கணினியுடன் பொருத்தப்படும் நினைவகங்கள் ஆகும்.

கணினியில் **[C], [D]** என வன்தட்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டிருக்கும் **(Partition)** அதே போன்று வெளியிலிருந்து பொருத்தப்படும் வெளியக வன்தட்டு **(External Hard disk)**, பேனா செலுத்தி **(Pen drive)**




என்பன உதாரணமாக **[J],[G]** என கணினியின் **folder pane** இலும் **Contant pane** இலும் காட்சியளிக்கும். இவை செலுத்திகள் **(Drivers)** எனப்படுகின்றன.

கோப்பு உறையொன்றை உருவாக்குதல், கோப்புறையின் பெயரை மாற்றுதல், கோப்புறையின் பட்டியல் விவரணம், அழித்த கோப்புறைகளை இருந்த இடத்திற்கே மீட்டுதல், கோப்புறைகளை முழுமையாக அழித்தல் பற்றி தரம் 07 தகவல் தொடர்பாடல் தொழினுட்ப புத்தகத்தில் படித்தவற்றை நினைவிற் கொள்க.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகள்!

பத்து மாதம் உன் உயிராய்
என்னை உன்னில் சுமந்தாய்!
உன் தூக்கம் விலாசமில்லா
கவிதையை போல்!

உன் உணர்வாய் நான்!
உன் மடியே என் வசிப்பிடம்
நான் தந்த வலிகள்!
உனக்கு இன்பங்கள் என
ஏற்றாய்!

உன் பூ முகம்
என் உணர்வாய்!
இன்று நான் புன்னகைக்கிறேன்!

அன்பின் சுமைகள் ஆயிரம்
கதை சொன்னது - அது
நீ சுமந்த வலிகளையும்
சொன்னது!

இரவு வானம் உனக்கு ஒரு
போர்வையாய் அமையட்டும்!
நிலா ஒளி உனக்கு விளக்காய்
எரியட்டும்!

குளிர் கால பனி வசந்தம் பாட
தூரம் செல்லும் விண்மீன்கள்
உனக்கு
தலையணையாய்
மாறட்டும்
இன்ஷா அல்லாஹ்!

✍ அன்பியா நாஸிம்
இஸ்லாஹிய்யா வளாகம்





தொழவும்
நேரமில்லை
ஓதவும்
நேரமில்லை
துஆ கேட்கவும்
நேரமில்லை
தௌபா செய்யவும்
நேரமில்லை!

# நேரம்

அல்லாஹ்வை பற்றி சிந்திக்க நேரமில்லை
அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த நேரமில்லை
நபியின் ஸுன்னாவை படிக்க நேரமில்லை
நபிக்கு ஸலவாத்து சொல்ல நேரமில்லை!

பெற்றோரை கவனிக்க நேரமில்லை
பெற்ற பிள்ளைகளோடு பேச நேரமில்லை
பண்போடு பழக நேரமில்லை
பணிவாக நடக்க நேரமில்லை!

மனைவியோடு அன்பாக பேச நேரமில்லை
மறுமைக்காக நன்மை தேட நேரமில்லை
ஏழைக்கு உதவ நேரமில்லை
ஏழ்மை பற்றி சிந்திக்கவும் நேரமில்லை!

பழகியவர்களோடு பேச நேரமில்லை
படைத்தவனை புகழ நேரமில்லை
மார்க்கத்தை கற்க நேரமில்லை
மாண்புமிகு நபிவழியை பின்பற்ற நேரமில்லை!

மனிதா! நேரமில்லை என எண்ணாதே
நேரம் இருக்கின்றது
உன் மரணம் வரும் வரை!

✍ எம்.யூ.எப். ஙுஹானியா
புத்தளம் பாத்திமா மு.ம.க.

## பேசும் கவிதை - இல 44



- படம் சொல்லும் சேதிகளை கவிதையாக எழுதியனுப்பலாம்.
- கவிதைகள் பத்து வரிகளுக்குள் அமைதல் வேண்டும்.
- எழுதி அனுப்பப்படும் கவிதைகள் கவிதைச் சரத்தில் பிரசுரிக்கப்படுவதுடன், தெரிவு செய்யப்படும் சிறந்த முதல் கவிதைக்கு பரிசாக பெறுமதியான புத்தகம் இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.
- கவிதைகள் தபாலட்டையில் மாத்திரமே எழுதப்படல் வேண்டும்.

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 2019 ஏப்ரல் 31**

அனுப்ப வேண்டிய முகவரி:
அகரம் சஞ்சிகை, 77, தெமடகொட வீதி, கொழும்பு 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டுக்குரிய ஏனைய கவிதைகள்



## முதலிடம் பெற்ற கவிதை

### ஐக்கியம்

பேதங்களை
அழித்தொழித்து
தாய்நாட்டில்
ஐக்கியத்தை
நிலைநாட்டி
நாளைய தலைவர்களாய்
பரிணமிக்க இருக்கும்
சுதந்திரச் சிறார்கள்
இவர்கள்தானோ!

✍ நீரா முஸ்தபா நஸ்ருல்லா
தல்கஸ்பிடிய
அரநாயக்க

### மாற்றம் கண்டிடு

கைகள் கோர்க்க
விரைந்திடு தோழா
உன்னாலும் முடியும்
சமாதான சரிதம் படைக்க
இனவெறி தகர்த்து
வன்முறை ஒழித்து
சரிதம் படைக்க
புறப்படு தோழா
உன்னாலும் முடியும்
மாற்றம் கண்டிட...

✍ மின்ஹா மாஹிர்
ஜாமிஆ ஆயிஷா ஸித்தீக்கா

### நம் தேசத்தின் மீது

நேசம் வைத்து
மத குலம் மறந்து
கொடியேற்றி கைகோர்த்து
சமர்ப்பிப்போம்
சுதந்திரமதை...

✍ எம்.ஆர். செய்னப்
பண்டாரகொஸ்வத்த

### தியாகம்

புன்னகை முகங்களை உயிர்ப்பித்து
புது வாழ்வு அளித்து
நீங்கா துரோகிகளைத் துரத்தி
துஷ்பிரயோகத்தை துடைத்து
இளம் சிட்டுகளை பறக்க விட்டு
நிம்மதியாக கண்மூட முடிகிறது
சுதந்திர நாட்டில்

✍ ஹாஜா ரியாஸ் முஹம்மத்
தெல்தோட்டை
இஸ்லாஹிய்யா வளாகம்

### இன, மத, மொழி பேதமின்றி

சிங்கக் கொடியை ஏந்திய வண்ணம்
ஒன்று திரண்ட பள்ளிச் சிறார்கள் நாம் – நம்
ஈழத்தின் 71 ஆவது சுதந்திர தினத்திலே
உறுதிபூண்டிடுவோம்
உலகை வென்றிட

✍ ஸைனப் சுக்ரி
அவிஸ்ஸாவளை

### வாரீர்

சுதந்திரப் பறவையாய்
இயந்திர யுகத்திலே
சகபாடிகளுடன் – வாரீர்
சுதந்திர கானம்
இசைத்திடுவோம்!

✍ எம்.ஐ. உமாரா
ஹில் கன்றி ச.பா.
மடவளை

### விடியல்

குரோதம், பகைமை
இனவெறி... அடியோடு ஒழிந்து
சகவாழ்வு, சமாதானம்
சமத்துவம்... தழைத்தோங்கி
பாகுபாடுகளின்றி – யாவரும்
இலங்கையர் என உணர்ந்து
உள்ளங்கள் ஒன்றிணைந்தாலே
சுந்தரமான எதிர்காலத்துக்கான
சுதந்திர விடியல் பிறக்கும்!

✍ ஆதில் அஸ்மில்
ஸாஹிரா தே.க.
மாத்தளை

### நாட்டுப் பற்று

பல தியாக
உயிர்களை தூவி
அறுவடை செய்த
சுதந்திரம் இது...
தாம் உருகி
நாட்டுக்கே ஒளி தந்த
வீரர்களை கொண்டாடும்
நாள் இது...

✍ எம்.ஏ.எப். ரிஹானி
உடதலவின்ன

### சுதந்திரம்

சிங்கக் கொடியோடு
சீருடை அணிந்த
சிறார்கள் யாம்
பெற்றெடுத்த சுதந்திரத்தை
வெற்றியோடு
கொண்டாடுகிறோம்

✍ பர்வின் வஹாப்மன்
அல் மு‌ஃமினாத் பெ.அ.க.
அக்குரணை

### சுகமான சுதந்திரச் சாரல்

அந்நியரின் ஆட்சியில்
அடிமையாய் இருந்த
தாயகமாம் எம் இலங்கை
1948 பெப்ரவரி தனில்
புது சுகந்தம் வந்ததே எமக்கு
விடுதலை விடியலின் வசந்தமதில்
கால்கள் தடம்பதிக்கும்
71 ஆம் வருடம்தனில் இன்று
மத வேற்றுமை இல்லாது
மனிதாபிமானம் கொண்டு
மகிழ்வுடன் கொண்டாடிடுவோம்
சுதந்திரத்தை

✍ ஏ.பீ. ஸஹ்ரா
இஸ்லாஹிய்யா பெ.அ.க.
புத்தளம்

### சுதந்திர தினத்தில் பாலர் நாம்

இன்னிசை கீதம் இசைத்தபடி
இருந்திடுவோம் இந்நாளினிலே
பறவைகள் போல் சுதந்திரமாய்
பறந்திடுவோம் இந்நாளினிலே
இன மத பேதமின்றி
இணைந்திடுவோம் ஒற்றுமையாய்
சுதந்திரத் தலைவர்களால் நாம் இன்று
சுதந்திரமாய் வாழ்கின்றோம்
வாழ்வோம் எந்நாளும்
பாரினிலே பாலர் நாம்

✍ எம்.என்.எப். நதா
க/கெப்பிடிய மு.ம.வி..
கலேவெல

### நற்பிரஜைகள்

நாட்டுக் கொடியினை
ஏந்தி நிற்கும்
இளஞ் சிட்டுக்களே!
நீங்கள்
நாட்டுப் பற்றும் நல்லொழுக்கமும்
நற்குணங்களுமுள்ள
நற்பிரஜைகளாக
நாடு போற்ற தளிர்த்திடுங்கள்!

✍ எம்.எஸ். அப்துல் ஸலாம்
பு/ஸாஹிரா கல்லூரி
புத்தளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31 ஆம் பக்கத் தொடர்...

பின்னர் அமீர் ஆசிரியர் முனீபையும் அழைத்துக் கொண்டு யானை சரணாலயத்துக்குச் சென்றார். அங்கு குட்டி யானைகளை சங்கிலியிலும், பெரிய யானைகளைக் கயிற்றிலும் பிணைத்துள்ளதை முனீப் கண்டான். உடனே அமீர் ஆசிரியரிடம் ''என்ன சேர் இது.. பெரிய யானைகள் கயிற்றை எளிதாக அறுத்து விடும். ஆனால், சிறிய யானைகளை சங்கிலியால் கட்டியுள்ளார்கள்'' என்று கேட்டான். அதற்கு அமீர் ஆசிரியர் ''முனீப்... மூளைத்தடை **(Brain Block)** தான் இது. குட்டி யானைகளைப் பிடித்து, இரும்புச்சங்கிலியில் பிணைத்து, பெரிய மரங்களில் கட்டி விடுவார்கள். அவை பிளிறிப் பார்க்கும், தப்பிக்க முயற்சிக்கும். ஆனால், சிறிய யானைகளுக்கு சங்கிலியை அறுக்கும் சக்தி கிடையாது. ஆனால், காலப்போக்கில் யானை அவ்வாறு முயற்சிப்பதில் எந்த பலனும் இல்லையென நம்பிக்கையை இழந்து விடும். தன் முயற்சியை நிறுத்தி விடும். எனக்கு இந்த இடத்தை விட்டு அசைய முடியாது... என்னால் நடக்க முடியாது என்று மூளைத்தடை போட்டுக் கொள்ளும். வளர்ந்து பெரிதாகி விட்டாலும் சங்கிலியில் இருந்து விடுவித்து கயிற்றில் கட்டி விட்டாலும் யானை தப்பிக்க முயற்சிக்காது. யானைக்கு இருக்கும் பலத்துக்கு சங்கிலிகளையே உடைத்தெறியலாம். ஆனால், சின்ன வயதிலேயே கட்டி வைத்து வளர்க்கப்பட்ட யானைகளின் மூளைகளில் உருவாக்கப்பட்ட **(Brain Block)** மூளைத் தடையினால் தப்பிக்க முயற்சிக்காது. இந்த யானைகளைப் போல்தான் நீயும். கணிதம் விளங்காது, மூளை நிரம்பி விடும் என்றெல்லாம் மூளைத்தடைகளைப் போட்டுக் கொண்டுள்ளாய்... முதலில் மூளைத்தடைகளை உடைத்தெறி. நம்பிக்கையை மட்டும் இழந்து விடாதே. இலக்கை எட்ட ஆரம்பத்தில் என்ன முயற்சி எடுத்தாயோ இப்போது அதை விட அதிக முயற்சி எடு. கணிதத்தை உனக்குப் புரியும் விதத்தில் நான் கற்றுத் தருகிறேன்'' என்றார்.

முனீபும் தன் மூளைத்தடைகளை உடைத்தெறிந்தான். அமீர் ஆசிரியரிடம் தினமும் கணிதம் கற்றான். எண் விளையாட்டு, கணிதப் பாடல், விரல்களின் உதவி கொண்டே பெருக்குவது, செயற்பாட்டு முறைப் பயிற்சி என விறுவிறுப்பான முறைகளில் கணிதப் பாடம் கற்பித்தார் அமீர் ஆசிரியர். கசத்துப் போயிருந்த கணிதப் பாடம் இனிக்க ஆரம்பித்தது முனீபுக்கு. அடுத்த தவணையிலேயே முனீபின் கணிதப்பாடப் புள்ளி அறுபதாக உயர்ந்தது. ஆசிரியர் விடவில்லை. அவனை கணிதத்தில் துறை போக கற்கச் செய்தார். ஒருநாள் முனீபை அழைத்து ஜார் ஜ்டாந்த்ஸிக் பற்றி சொன்னார். ''முனீப். ஒருநாள் ஜார் படிக்கும் கல்லூரியில் கணித வகுப்பு. உலகின் பெரிய கணித மேதைகளால் தீர்க்க முடியாத இரண்டு கணக்குகளை பலகையில் எழுதிய அவரது ஆசிரியர் அவை இன்று வரை தீர்க்கப்படாத புரியாத புதிர் என்றார். அப்போது அங்கிருந்த மாணவர்கள் எல்லோரும் மூளைக்குள் தடை போட்டுக் கொண்டார்கள். பெரும் கணிதவியலாளர்களால் தீர்க்க முடியாததை நாம் எப்படித் தீர்ப்பது என்ற எண்ணமே அது. சற்று தாமதமாய்த்தான் ஜார் வந்தார். அதற்குள் வகுப்பு முடிந்திருந்தது. கரும்பலகையில் எழுதப்பட்டிருந்த அந்தக் கணக்குகளை வீட்டுப்பாடங்கள் என்று நினைத்து குறித்துக்கொண்டு போனார். வீட்டுப் பாடத்தை எப்படியும் நாளை முடித்துச் செல்ல வேண்டும் என்ற எண்ணத்தில் அன்றிரவெல்லாம் முயற்சித்து மறுநாள் விடையுடன் வந்தார். அந்த சம்பவத்தாலேயே உலகப் புகழ்பெற்ற கணிதவியலாளரானார். ''அது யாராலும் முடியாது என்று எனக்குத் தெரியாது. எனவே என்னால் முடிந்தது'' என்றார் ஜார். இவ்வாறுதான். முடியாது என்று நினைப்பவர்களுக்கு முடியாமலே போகிறது. முடிக்கலாம் என முயற்சிப்பவர்களுக்கு கிடைத்து விடுகிறது'' என்றார். இதனைக் கேட்ட முனீப் இன்னும் ஆர்வத்துடன் கணிதத்தைக் கற்கத் தொடங்கினான்.

ஒருநாள் ஆசிரியர் அவனை அழைத்து ''முனீப்.. நமது முஸ்லிம் முன்னோடிகள் தான் கணிதத்தை வளர்த்தவர்கள். சிபார் என்பவர் சைபரை கண்டு பிடித்தவர். உலகம் போற்றும் கணித மேதை அல்குவாரிஸ்மி கண்டுபிடித்த தேற்றங்கள்தான் கணிதத்தில் இன்றும் பயன்பாட்டில் உள்ளன. அல்பிரூனி பூமியின் சுற்றளவைக் கணிக்க வாய்ப்பாடு உருவாக்கியவர். அலி ஜாபிர் என்ற பெயர்தான் அல்ஜிப்ரா எனும் கணிதக் கோட்பாடாக மாறிப்போனது. எனவே, நீயும் ஒரு கணிதவியலாளராக வரவேண்டும் என தட்டிக் கொடுத்தார். முனீப் கணிதத்தை துறை போகக் கற்றான். அமீர் ஆசிரியரின் வழிகாட்டலில் சாதாரண தரப் பரீட்சையில் கணிதம் உட்பட சகல பாடங்களிலும் அதிதிறமைச் சித்தி. உயர் தரத்திலும் கணிதத்துறையை தேர்ந்து தொடர்ந்தும் முன்னேறினான். இப்போது ஒரு கணிதக் கண்டுபிடிப்பாளராக கணித ஆய்வாளராக கணிதப் பேராசிரியராக பணியாற்றிக் கொண்டிருக்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் ஜீனியஸ்?



1. இலங்கையின் நீர் பரப்பு எவ்வளவு?
2. இலங்கையில் நீரிழிவு நோயினால் எத்தனை வீதமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்?
3. மூங்கில் மரம் சிங்களத்தில் எவ்வாறு அழைக்கப்படும்?
4. சர்வதேச சுகாதார தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?
5. புருணை நாட்டின் தலைநகர் எது?
6. பேராசிரியர் மர்ஹூம் எஸ்.எச். ஹஸ்புல்லாஹ் பிறந்த கிராமம் எது?
7. 19 ஆவது ஆசியா விளையாட்டு எந்நாட்டில் நடைபெற இருக்கிறது?
8. உலகில் மூங்கில் மரம் எந்நாட்டில் அதிகம் பயிரப் படுகிறது?
9. யுனெஸ்கோ அமைப்பினால் இலங்கையில் எத்தனை இடங்கள் உலக பாரம்பரிய இடங்களாக அடையாளப் படுத்தப்பட்டுள்ளது?
10. 2020 இல் ஒலிம்பிக் போட்டிகள் எந்நகரத்தில் இடம்பெற இருக்கிறது?

**போட்டி**
**இல: 17**

## போட்டியின் நிபந்தனைகள்

01. தெரிவு செய்யப்படும் வெற்றியாளர்களுக்கு பெறுமதியான புத்தக பரிசில்கள் அனுப்பி வைக்கப்படும்.
02. சரியான விடையை தபால் அட்டையில் மாத்திரம் எழுத வேண்டும்.
03. விடைகளை அனுப்பவேண்டிய முகவரி

**அகரம்**
No 77, Sri Vajiragnana mw
Colombo-09

04. போட்டி முடிவுத்திகதி 30.04.2019

## யார் ஜீனியஸ்? போட்டி இல- 15 முடிவுகள்

### பரிசுக்குரியவர்கள்

**கஸீர் கஸீர்**
**சிராஜிய்யா அ.க., கந்தலே**

**ட. தஹ்மியா**
**அ/கலாவெவ மு.ம.க.**

**எம்.ஏ.எம். யூனுஸ்**
**கண்டி வீதி, கல்ஹின்ன**

### பாராட்டுக்குரியவர்கள்

எம்.எஸ்.எம். யூஸுப் – விலங்கம, கண்டி
எம்.எப். மின்ஹா – மட்/பாத்திமா பெ.ம.க., ஓட்டமாவடி
ஏ.ஆர். முன்ஸபா – பொலன்னறுவை
எம்.யூ.எப். ரஹீமா – ஹாதிய்யா இ.க.நி., குரீகொடுவ
எம்.ஐ. அப்துல்லாஹ் – திகனை, ரஜவெல்ல
எம்.ஏ. மொஹமட் – லெமகஹ கொடுவ
எச்.எம். தல்ஹா – மூதூர் 05
எம்.ஆர். செய்னப் – பண்டார கொஸ்வத்த
என்.எம். நஜாத் – சிராஜிய்யா அ.க., தம்பலகாமம்
ஆர்.எம். அஹ்ஸன் – சிராஜிய்யா அ.க., தம்பலகாமம்
எம். அஸ்லம் – தம்பலகாமம்
ஏ.ஆர்.எம். நப்ரி – சிராஜிய்யா அ.க., தம்பலகாமம்
யூ.எப். முனீபா – முள்ளிப்பொத்தான
எச்.எம். அப்லல் – சிராஜிய்யா அ.க., தம்பலகாமம்
நுஹா கியாஸ் – மஹவத்த, திஹாரி
எம்.எஸ்.எப். சமீரா – நிக/பன்னவ மு.ம.க.
அம்னி ஹஸன் – தித்தவல்கால, நிகதலுபொத
எம்.யூ.எப். ஸஹ்ரா – தி/அல் ஹிரா மு.பெ.ம.வி., கிண்ணியா 03
எப்.எப். இஸ்ரா – அக்/அல் முனீறா பெ.உ.பா., அட்டாளைச்சேனை
ஏ.பீ.எப். ஷானாஸ் – கா/ஜாமியுல் அஸ்ஹர் ம.க., உடதலவின்ன
என்.ஐ. ரஹ்மா – நம்புலுவாவ, பஸ்யால
ஏ. கதீஜா – அல் ஹிக்மா மு.ம.வி., தித்தவல்கால, நிகதலுபொத
என்.எம். பஹ்மான் – ஸுலைமானியா க., கன்னத்தோட்டை
அர்ஷாட் நஸ்ருல்லா – தல்கஸ்பிட்டிய மு.ம.வி., அரனாயக்க
கே. ஸாகிரா சமான் – குளி/அல் ஹுமைரா ம.வி., ஏதன்டவெல
எம்.எம். ஸித்தீக் – அல் பலாஹ் க., பலஹதுறை
எம்.ஆர்.எப். ரிப்தா – வல்பொலதெனிய, மாவனல்லை
எம்.ஏ. ஸைனப் – கம்பளை ஸாஹிரா க.
எம்.ஆர்.எப். ஸைனப் – அல் ஹுதா மு.ம.வி., ரம்புக்கனை
எம்.என்.எப். நதா – மட்/மீராவோடை அல் ஹிதாயா ம.வி.
எம்.எப். அமானி – நஸ்ரியா ம.க., சிலாபம்
எம்.ஜே.எம். அஸ்பாக் – குளி/மடிகே மிதியால ம.க., பண்டாரகொஸ்வத்த
எம்.ஐ.எப். ஸைமா – நஸ்ரிய்யா ம.க., சிலாபம்
இமாத் இல்லியாஸ் – வியாங்கல்லை, அகலவத்தை
உமர் ஜெஸ்லாம் – எல்லரமுல்ல ஸாஹிரா மு.வி., பஸ்யால
எம்.எம்.எப. பஸீனா – கெகுணகொல்ல
ஸம்ஹா நியாஸ் – கம்பளை
எம்.என்.எப். நபா – மட்/பதுரியா நகர் அல் மினா வி.
எஸ். ஆகிப் அஹமட் – வாழைச்சேனை 05
கே.ஏ.எம். இமாத் – அல் பலாஹ் க., கொச்சிக்கடை
எம்.எச். யாஸிர் மொஹமட் – நூரானிய்யா மு.பெ.வி., பொலன்னறுவை
எம்.ஆர். அப்துர்ரஹ்மான் – மட்/மீரா பாலிகா தே.பா., காத்தான்குடி 06
எஸ்.எச். சாதுலி அஹமட் – காலி
எம்.எஸ்.எப். ஸைனப் – அவிஸ்ஸாவளை
என்.எப். நதா – தி/அந்நஹார் பெண்கள் ம.வி.
எம்.எப். யஸ்மீன் – ஸாஹிரா கல்லூரி, மாவனல்லை
எம்.என். ருகைய்யா – கிரி/சுலைமானிய்யா மு.ம.வி., குரீகொடுவ
எப்.எம். முஹமட் பஸாத் – தி/அந்நூரிய்யா மு.ம.வி., குச்சவெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிந்தனைக் கதை

# மகிழ்ச்சியான வாழ்க்கை

மெக்சிகோவிலுள்ள ஓர் அழகிய சிறிய தீவில் ஒரு மீனவன் இருந்தான். அவனிடம் ஒரு சிறிய மீன்பிடிப் படகிருந்தது.

ஒரு நாள் ஓர் அமெரிக்க சுற்றுலாப் பயணியை அவன் சந்தித்தான். அந்தப் பயணிக்கு அவனை மிகவும் பிடித்து விட்டது. அவனது தொழிலைப் பற்றியும் அவனது வாழ்க்கையைப் பற்றியும் அவனிடம் பேசிக் கொண்டிருந்தார்.

அவனது அன்றாட வாழ்வை அவரிடம் விவரித்தான். அதிகாலையில் மீன்பிடிக்கச் செல்லும் அவன், பிடித்து வந்த மீனை விற்று விட்டு, நாள் முழுவதும் தன் குழந்தைகளுடன் விளையாடுவது, நண்பர்களுடன் அரட்டையடிப்பது, நன்றாகத் தூங்குவது, மாலையில் தன் மனைவியுடன் கடைவீதிக்குச் செல்வது எனத் தன் நாளைக் கழிப்பதாக சொன்னான்.

உடனே அந்த அமெரிக்கப் பயணி, "நீ ஏன் இன்னும் அதிக நேரம் மீன் பிடிக்கக் கூடாது?'' என்று கேட்டார்.

மீனவன், "கொஞ்ச நேரம் மீன் பிடிப்பதிலேயே என் அன்றாட வாழ்விற்கு தேவையான மீன் கிடைக்கிறது. அப்புறம் நான் ஏன் அதிக நேரம் மீன் பிடிக்க வேண்டும்?'' என்று கேட்டான்.

"நான் ஹார்வார்ட்டில் வணிக மேலாண்மை படித்தவன். உன் வாழ்வை எப்படி மேம்படுத்துவது என்று உனக்குக் கூறுகிறேன்'' என்று சொன்னார்.

"நீ தினமும் நான்கு மணி நேரம் அதிகமாக மீன் பிடிப்பதில் செலவழி. அதை விற்று வரும் அதிக பணத்தில் ஆறே மாதத்தில் இன்னொரு படகு வாங்கிவிடலாம்'' என்று சொன்னார்.

''அப்படி வாங்கினால்?'' என்று கேட்டான் மீனவன்.

"இரண்டு படகுகளைக் கொண்டு சம்பாதித்தால் மூன்றே மாதங்களில் அடுத்த படகு வாங்கலாம். இப்படியாக ஒரு பெரிய மீன்பிடி நிறுவனமே உருவாக்கி விடலாம்'' என்று கூறினார்.

''இதெல்லாம் நடக்க எவ்வளவு நாளாகும்?'' என்று மீனவன் கேட்டான்.

''ஒரு இருபது வருடங்களாகலாம்'' என்றார் பயணி.

மீனவன், ''அப்புறம் என்ன செய்வது'' என்று கேட்டான்.

"உன் நிறுவத்தின் பங்குகளை நீ விற்கலாம். பல ஆயிரம் கோடிகளுக்கு நீ அதிபதி ஆகலாம்'' பயணி சொன்னார்.

''பல ஆயிரம் கோடிகளா!'' என்று வியந்தான்.

"ஆமாம். அப்புறம் நீ ஒரு தீவையே விலைக்கு வாங்கி ஓய்வெடுக்கலாம். அந்தத் தீவில் நீ உன் குழந்தைகளுடன் விளையாடலாம், நண்பர்களுடன் அரட்டையடிக்கலாம், மீன் பிடிக்கலாம், படகுச் சவாரி செய்யலாம், கடலில் நீந்தி மகிழலாம், உன் மனைவிக்குத் தேவையானதையெல்லாம் வாங்கித் தரலாம். மொத்தத்தில் அதுதான் சொர்க்கம்'' என்று தனது வணிக யோசனையின் பலன்களை ரசித்துச் சொன்னார்.

மீனவன், ''நான் இப்போதே அந்த வாழ்க்கையைத்தானே வாழ்ந்து கொண்டிருக்கிறேன். நான் இப்போது சந்தோஷமாக இருக்கிறேன். இந்தத் தீவும் என் தீவு போலத்தான். இப்போதும் என் மனைவி கேட்பதையெல்லாம் என்னால் வாங்கித்தர முடிகிறது.

நான் எதற்காக இருபது வருடங்கள் கஷ்டப்பட்டு விட்டு அப்புறம் அந்த வாழ்க்கையை அனுபவிக்க வேண்டும். தவிர இன்னும் இருபது வருடங்கள் கழித்து என் குழந்தைகள் பெரியவர்களாகி விடுவார்களே. அப்புறம் நான் யாரோடு விளையாட முடியும்?'' என்று கேட்டான்.

அவரிடம் பதிலில்லை.

## எண்ணங்களின் வண்ணங்கள் - 36

பாராட்டுக்குரியவர்கள்

எச்.எம். ஹஸீர் – சிறாஜியா அ.க.
டீ.எப். ஹஸீனா கிரி/சுலைமானியா மு.ம.வி.,
எச். பஹ்மா – க/அல்ஹிக்மா க., தெல்தோட்டை
எம்.ஆர்.எப். ரஸா – குளி/மடிகே மிதியால ம.க.
எஸ்.எம். முஹஸ்ஸின் – பண்டாரகொஸ்வத்த
ஆர். ரிஸ்லான் – நூரானிய்யா வி., நவசேனபுர
ஏ.ஆர். ஆயிஷா உமைரா – மட்/மீரா பாலிகா தே.பா.
ஹாகிம் நிஸார் – க/அசோகா வி., கண்டி
ஏ.ஆர். ஆயிஷா ஹனான் – மட்/மீரா பாலிகா தே.பா.
என்.எம். றிழா – சிறாஜியா அ.க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12 ஆம் பக்கத் தொடர்...

மூங்கில்களில் இருந்து உதிரும் இலைகள் மண்புழு உரம் தயாரிக்க பயன்படுகின்றது. ஏனைய உரங்களை விடவும் இதில் நல்ல பயனிருப்பதாகக் கூறப்படுகிறது. அத்தோடு மூங்கிலிலிருந்து பெறப்படும் அரிசி உண்பதற்கு மிகவும் ஆரோக்கியமானது. சீனா, ஜப்பான் நாடுகளில் மூங்கில் அரிசி விற்பனைக்குண்டு. மூங்கில் குருத்திலிருந்து செய்யப்படும் பானமும் (ஜூஸ்) உணவும் இந்நாடுகளில் மிகவும் பிரபலம். மனிதனுக்கு மட்டுமன்றி இளம் மூங்கில் குருத்துகள், இலைகள் ஆகியன பண்டாக் கரடி, சிவப்பு பண்டாக் கரடி, மூங்கில் லெமூர், கொஹாலா, கினிப் பன்றி போன்ற விலங்குகளின் முதன்மையான உணவாகவும் இருக்கின்றது.

**உங்கள் வீட்டு முற்றத்திலும் நாட்டலாமே!**

இன்று அநேகமான வீடுகளில் முற்றங்களை அழகுபடுத்துவதற்காக முள்ளில்லா மூங்கில்கள் நடப்படுகின்றன. இவை உண்மையிலேயே அழகானவை. அதிக உயரம் வளர்வதுமில்லை. ஒரு நேராக இடம் விட்டு இடம் இந்த மூங்கில்களை நட்டால் அவை பார்வைக்கு அழகாகவும் குளிர்ச்சியாகவும் பசுமையாகவும் இருக்கும். உங்கள் வீட்டு முற்றத்திலும் நாட்டிப் பாருங்கள். அழகு மட்டுமன்றி ஆரோக்கியமும் கிடைக்கும். பூமரங்கள் விற்பனை செய்யும் இடங்களால் நன்கு வளர்ந்த மூங்கில் கன்றுகளை 3000 ரூபாவிலிருந்து விலைக்கு வாங்கி நடலாம். நட்டு ஆரம்பத்தில் நன்கு தண்ணீர் விடவேண்டும். அதன்பின்பு அதுவாக வளர்ந்து வரும். இனி பராமரிப்பது மட்டும்தான் வேலை. அந்த மரத்திலிருந்து வரும் சிறிய கன்றுகளை சிதையாமல் பிடுங்கி வேறு இடங்களில் நட்டால் அவையும் காலப் போக்கில் துரிதமாக வளர்ந்து அழகு தரும். இவற்றுக்கு பூச்சித் தொற்றுகள் வருவது மிகக் குறைவு. சில நேரம் கறையான், வெள்ளைப் பூஞ்சான் போன்ற பூச்சிகள் தாக்கும். அப்போது பூச்சிக் கொல்லி திரவங்களைத் தெளித்து கட்டுப்படுத்தலாம். வீட்டைச் சுற்றி மூங்கில் மரங்களை நட்டுப் பாருங்கள் சுத்தமான ஒக்ஸிஜன் காற்றுக் கிடைக்கும். கண்ணுக்கு குளிர்ச்சி கிடைக்கும். வீட்டைச் சுற்றியும் குளிர்ச்சி கிடைக்கும். வீட்டுக்கு ஒரு புதர் மூங்கில் நாட்டுவோம் என்ற திட்டத்தை ஆரம்பிப்போம்.

## புதிதாக அறிமுகமாகின்றது

### எங்கள் பாடசாலை

அகரம் இதழில் புதிதாக ''எங்கள் பாடசாலை'' என்றதோர் பக்கம் அறிமுகமாக இருக்கிறது. இப் பக்கத்தில் உங்கள் பாடசாலையை அறிமுகப்படுத்தவும் மாணவர்களிற்கு உக்குவிப்பு நிகழ்ச்சிகளை **[motivation program]** பாடசாலைகளில் நடாத்தவும் தயாரகவுள்ளோம்.

**தொடர்புகளுக்கு: 0710751075**

## பேசும் கவிதை இல. 43

எம்.என்.பீ. நதா – அல் பலாஹ் க., கொச்சிக்கடை
ஜே.எம். ஷியாம் ஷிப்ரான் – ஒட்டமாவடி 01
என்.எப். நதா – அந் நஹார் பெ.ம.வி.
எம்.எப். அமானி – மனபொட, உக்குவளை
டீ.எம். நிஸ்லீன் – சிராஜிய்யா அ.க., கந்தலே
என். நுஸ்ரி அஹமட் – நிக/அபுக்காகம மு.ம.வி
எம்.ஐ. மஹ்தி – ஹில் கன்றி ச.பா., மடவளை
எம்.ஆர்.எப். ரியாஸா – ஹெம்மாதகம
எம்.ஐ.எம். அஸ்கி – சம்மாந்துறை
நஸ்ஹத் ஆரா நியாஸ் – பு/பாத்திமா மு.ம.வி., புத்தளம்
ஏ.ஏ. அகீலா – தி/அந் நூரிய்யா ம.வி., குச்சவெளி

### தரம் இருந்தும் இடம்பிடிக்கத் தவறியவை...

எம்.எச்.எப். சில்மியா – தி/அந் நூரிய்யா ம.வி., குச்சவெளி
எம்.எஸ்.எப். சம்ரா – தித்தவல்கால, நிகதலுபொத
ஏ.ஆர். றஹ்மா – மா/அஜ்மீர் தே.பா., உக்குவளை
கே. தஸானா – தி/அந்நூரியா மு.ம.வி., குச்சவெளி
ஹுதா ஹலீம் இஸ்ஹாக் – க/அக்குரணை மு.பெ.ம.வி.
எம்.ஏ. மர்யம் – க/கம்பளை ஸாஹிரா க.
எம்.எல்.ஏ. கையூம் – கமு/நற்பிட்டிமுனை அல் அக்ஸா ம.ம.வி., கல்முனை
நிஸார் நிப்லா – மனாருல் ஹுதா பெ.அ.க., மூதூர் 01
றில்வான் உம்மு றிஸ்னா – தி/அந்நூரியா மு.ம.வி., குச்சவெளி
எம்.என்.எப். நதா – மட்/மீராவோடை அல் ஹிதாயா ம.வி.

## எண்ணங்களின் வண்ணங்கள் - 39

- உங்களது சித்திரம் A4 தாள் அளவில் அமைதல் வேண்டும்.
- சித்திரங்களுக்கு பயன்படுத்தும் வர்ணம் 'சோக் கலர்' ஆக இருத்தல் வேண்டும்.
- சிறந்த மூன்று படைப்புகளுக்கு பெறுமதியான புத்தகம் வழங்கப்படுவதுடன் பாராட்டைப் பெறும் சித்திரங்களும் அகரத்தில் பிரசுரிக்கப்படும்.

**தலைப்பு: மூங்கில் தோப்பு**

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 2019 ஏப்ரல் 30**

அனுப்ப வேண்டிய முகவரி:
அகரம் சஞ்சிகை, 77, தெமடகொட வீதி,
கொழும்பு 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொடர்புகளுக்கு:
071 445 2120




# ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை - 2019
## விளக்கம், பயிற்சி

எம். ஷஹீல் காசிம் BEd. (Hons) | அல் ஹிக்மா கல்லூரி, கொழும்பு 12

## கணிதம் (திசைகள்)


**இடைவெளிக்குப் பொருத்தமான திசைகள் எட்டினையும் குறித்துக் காட்டுக.**



எட்டுத் திசைகளில் காணப்படும் பிரதான நான்கு திசைகளும் எவை?


1. ........................................
2. ........................................
3. ........................................
4. ........................................

**பாடசாலையில் இருந்து பார்க்கும்போது மற்றைய பொது இடங்கள் அமைந்திருக்கும் திசையினை இடைவெளிகளில் எழுதுக.**




1. விகாரை - ..............................
2. வைத்தியசாலை - ..............................
3. தேவாலயம் - ..............................
4. கோயில் - ..............................
5. பள்ளிவாசல் - ..............................
6. கடை ..............................

**திசைகளை மையமாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**




1. மாணவருக்கு வடக்குத் திசையில் உள்ளது எது?

..............................................................

2. மாணவருக்கு கிழக்குத் திசையில் உள்ளது எது?

..............................................................

3. பேருந்து மாணவருக்கு எத்திசையில் உள்ளது?

..............................................................

4. பந்து மாணவருக்கு எத்திசையில் உள்ளது?

..............................................................

5. படகு மாணவருக்கு எத்திசையில் உள்ளது?

..............................................................

6. மாணவருக்கு தென்மேற்கில் (நிருதி மூலையில்) உள்ளது யாது?

..............................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. பேருந்து கிழக்கில் உள்ளது எது?

.....................................................................

8. காருக்கு மேற்கில் உள்ளது எது?

.....................................................................


9. புகையிரதம் படகிற்கு எத்திசையில் உள்ளது?

.....................................................................


10. பந்து பேருந்துக்கு எத்திசையில் உள்ளது?

.....................................................................

**தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கிணங்க ஒவ்வொரு திசையிலும் வர வேண்டிய உருவங்களை வரைக.**





1. மரத்திற்கு வடக்குத்திசையில் எரிபொருள் நிலையம் உண்டு.
2. மரத்திற்கு தெற்குத் திசையில் பொதுக் கிணறு உண்டு.




3. எரிபொருள் நிலையத்திற்கு மேற்குத் திசையிலும் மரத்திற்கு வடமேற்குத் திசையிலும் கார் உண்டு.
4. தபாற்பெட்டி மரத்திற்கு மேற்குத் திசையிலும், எரிபொருள் நிலையத்துக்கு மேற்கு திசையிலும் கார் உண்டு.
5. பொது கிணற்றிற்கு வட கிழக்குத் திசையிலும், வீட்டிற்கு வடக்குத் திசையிலும் விகாரை உண்டு.
6. வீடு விகாரைக்குத் தெற்குத் திசையிலும் மரத்திற்கு தென்கிழக்கு திசையிலும் உண்டு.
7. பேருந்துத் தரிப்பிடம் எரிபொருள் நிலையத்துக்கு கிழக்குத் திசையிலும், விகாரைக்கு வடக்குத் திசையிலும் உண்டு.
8. மரத்திற்கு தென்மேற்குத் திசையிலும், தபாற் பெட்டிக்கு தெற்குத் திசையிலும் கடை உண்டு.

**தரப்பட்டுள்ள உருவத்தை அவதானித்து இடைவெளிகளை நிரப்புக.**




1. விகாரை தபாற்பெட்டிற்கு ................................. திசையில் உள்ளது.
2. வைத்தியசாலை மைதானத்திற்கு ................................. திசையில் உள்ளது.
3. தேவாலயம் வைத்தியசாலைக்கு ................................. திசையில் உள்ளது.
4. ................................. விகாரைக்குக் கிழக்குத் திசையில் உள்ளது.
5. ................................. பொலிஸ் நிலையத்திற்கு வடமேற்குத் திசையில் உள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. வைத்தியசாலை விகாரைக்கு ......................... ............ திசையில் உள்ளது.

7. பாடசாலை தேவாலயத்திற்கு ......................... .............. திசையில் உள்ளது.

8. ....................................... பாடசாலைக்கு தெற்குத் திசையில் உள்ளது.

9. ....................................... விகாரைக்கு மேற்குத் திசையில் உள்ளது.

10. பொலிஸ் நிலையம் பலசரக்குக் கடைக்கு ....................................... திசையில் உள்ளது.

11. மைதானம் பொலிஸ் நிலையத்திற்கு ........... ......................... திசையில் உள்ளது.

12. ....................................... தேவாலயத்திற்கு கிழக்குத் திசையில் உள்ளது.

## சுற்றாடல் (நாம் இலங்கையர்)

**சுருக்கமான விடை தருக.**

1. எமது நாட்டில் அமைந்துள்ள இயற்கை வளங்களைப் பெயரிடுக.

i. ...........................................

ii. ...........................................

iii. ...........................................

iv. ...........................................

v. ...........................................

vi. ...........................................

vii. ...........................................

viii. ...........................................

2. இயற்கை வளங்களைப் பார்வையிடச் செல்லும் உல்லாசப் பிரயாணிகள் அவ்விடத்திற்குச் செய்யும் தீங்குகளைக் கூறுக.

i. ...........................................

ii. ...........................................

iii. ...........................................

3. இயற்கை வளங்களைப் பாதுகாக்க அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் எவை?

i. ...........................................

ii. ...........................................

iii. ...........................................

4. இலங்கையில் தயாரிக்கப்படும் கைப்பணிப் பொருட்களைப் பார்வையிடச் செல்லப் பொருத்தமான இடங்களைக் கூறுக.

i. ...........................................

ii. ...........................................

5. இஸ்லாமியப் பெண்களின் கலாசார உடை எது?

...........................................

6. வேடுவரின் கலாசார நடனத்தின் பெயர் என்ன?

...........................................

7. எஸ். மஹிந்த ஹிமி எழுதிய நூல்கள் சிலவற்றின் பெயர்களை எழுதுக.

...........................................

8. இலங்கையில் உள்ள குடிசைக் கைத்தொழில்கள் 2 கூறுக.

i. ...........................................

ii. ...........................................

9. இலங்கையில் உள்ள சகல இனத்தவரும் கொண்டாடும் விழாக்கள் 2 எழுதுக.

i. ...........................................

ii. ...........................................

10. பின்வரும் அந்நிய நாட்டவர் இலங்கையை ஆட்சி செய்த காலப்பகுதிகளைக் குறிப்பிடுக.

போர்த்துக்கேயர் : ...........................

ஒல்லாந்தர் : ...........................

பன்புல் : ...........................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கீழே தரப்பட்டுள்ள 4 சமயத்தவர்களினதும் சமய விழாக்களை எழுதுக.**

| பௌத்தர்கள் | இந்துக்கள் | முஸ்லிம்கள் | கிறிஸ்தவர்கள் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

**பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.**

11. ஒல்லாந்தர் இலங்கையை கைப்பற்றிய ஆண்டு எது? ......................

12. இலங்கை சுதந்திரமடைந்த ஆண்டு எது? ......................

13. தேசியக் கொடியின் வர்ணங்கள் குறிக்கும் இனங்கள் எவை? ......................

14. தேசியக் கொடியில் அமைந்துள்ள உருவங்கள் எவை? ......................

15. தேசியக் கீதத்தை இயற்றியவர் யார்? ......................

16. தேசிய கீதத்தைத் தமிழில் மொழி பெயர்த்தவர் யார்? ......................

17. இலங்கையின் சுதந்திரத்திற்காகத் தொண்டாற்றிய வர்களின் பெயர்கள் 5 கூறுக.

i. ............................................

ii. ............................................

iii. ............................................

iv. ............................................

v. ............................................

18. இலங்கையின் எப்பகுதிகளில் வேடர்கள் வாழ்ந்து வந்தனர்? ......................

**கீழே தரப்பட்ட தலைவர்கள் நாட்டுக்காகச் செய்த சேவைகள் ஒவ்வொன்று வீதம் தருக.**

| தலைவர்கள் | சேவைகள் |
|---|---|
| கொங்காலேகொட பண்ட | |
| கெப்பெட்பொல திசாவை | |
| ஆனந்த குமார சுவாமி | |
| ரீ.பீ. ஜாயா | |
| ரீ.பீ. ஜயதிலக | |
| வண. எஸ். மஹிந்த | |
| சீ.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கர | |
| ஆதர் சீ. கிளார்க் | |

**பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

19. இலங்கை சுதந்திரமடைந்த ஆண்டு

i. *1928* ii. *1948* iii. *1984* iv. *1982*

20. இலங்கையின் சுதந்திரத்துக்காகத் தொண்டாற்றிய வர்களுள் ஒருவர்

i. சேர் ஐசாக் நியூற்றன் ii. சேர் அலெக்சாண்டர்

iii. சேர் பொன் இராமநாதன் iv. சோற் கேரத்

21. வேடர்களின் பிரதான தொழில்

i. சுருட்டு சுற்றுதல் ii. புடவை நெய்தல்

iii. கயிறு திரித்தல் iv. வேட்டையாடுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தமிழ்



**சுப்பிரமணி பாரதி**

| | |
|---|---|
| பெயர் | சுப்பிரமணியம் |
| வேறு பெயர்கள் | பாரதியார் |
| பிறப்பு | டிசம்பர் 11, 1882 |
| பிறந்த இடம் | எட்டயப்புரம், சென்னை, இந்தியா |
| இறப்பு | செப்டெம்பர் 11, 1921 (அகவை 38) |
| வாழ்க்கைத் துணை | செல்லம்மாள் (1897) |
| இலக்கியப் பணி | குயில் பாட்டு, கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம், பாரதியார் பாடல்கள் |

## தொலைக்காட்சி



நாட்டினிலே நடப்பதெல்லாம்
நல்ல பல செய்திகளெல்லாம்
வீட்டினிலே காட்டிவிடும்
வித்தையான பெட்டியிது!!
தொலைதூரக் காட்சிகளெல்லாம்
தொடுந்தூரம் தெரிய வைக்கும்!
அலை கடலைத் தாண்டி ஒளி
அலைகளால் அறிய வைக்கும்!
விண்வெளியில் நடப்பவரை
வீட்டிற்கே கொண்டு வந்து
கண் எதிரில் காட்டி விடும்!
களிப்படையச் செய்து விடும்
வீட்டினுள்ளே திரையரங்கம்!
விடெல்லாம் கலைமுழங்கும்
ஏட்டிலுள்ள கல்வியெல்லாம்
எளிதினிலே ஊட்டிவிடும்!

**சந்திர ஹரி**

வினாக்களுக்கு விடை எழுதுக.

1. இந்த பாடல் எதைப் பற்றிக் கூறுகிறது?
2. வினை சொல் ஒன்று தருக.
3. பெயர் சொல் ஒன்று தருக.
4. பிரித்து எழுதுக.

   தொடுத்தூரம் ....................+...............

   வீட்டினுள்ளே ....................+...............
5. பாடலிலிருந்து ஒத்த சொல் எழுதுக.

   ஒளி ....................................

   கடல் ....................................

   அலை ....................................

   எளிது ....................................
6. எதிர்சொல் எழுதுக.

   நாடு ....................................

   களிப்பு ....................................

   பல ....................................

   தொலைவு ....................................
7. பன்மை சொல் எழுதுக.

   வீட்டினிலே ....................................

   ஏட்டிலுள்ள ....................................
8. பெயராகவும் வினையாகவும் வரும் சொற்கள் எழுதுக.

   ..................................................
9. செய்திகளை பெற்றுக் கொள்ளக்கூடிய வேறு சாதனங்கள் இரண்டு தருக.

   ..................................................

   ..................................................
10. ஆங்கில பதம் எழுதுக.

    செய்தி ....................................

    கடல் ....................................




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணங்களின் வண்ணங்கள் - 36

## தலைப்பு: சுதந்திர தினம்

### பரிசில் பெறும் சித்திரங்கள்




நஸ்நல்லாஹ் நஸ்றுடீன்
க/அல் மனார் தே.பா.
ஹந்தெஸ்ஸ



என்.எப். அம்ரா
கம்பளை ஸாஹிரா க.



எப்.எப். சிஹாரா
தி/அல்மினா ம.வி.
மூதூர் 02

### பாராட்டுக்குரிய சித்திரங்கள்



எம்.ஜே.எப். அப்ரோஸ்
கல்/திகழி முஸ்லிம் ம.வி.
ஏத்தாளை



எம்.ஆர். ரீமா
அரபா முஸ்லிம் ம.வி.
வஹீங்கொஹ, ஹந்தஸ்ஸ




மாஹிர் ஆயிஷா
தாஹா நகர்
மூதூர் - 07



எம்.எப். அமானி
மா/அஜ்மீர் தே.பா.
உக்குவளை



ஏ.ஆர். ஜெனீஸா
அல் முஃமினாத் பெ.அ.க.
அக்குரணை




ஏ.ஏ. அகீலா
தி/அன் நூரியா மு.ம.வி.
குச்சவெளி



எம்.என்.எப். நதா
மட்/அல்ஹிதாயா ம.வி.
மீராவோடை



எம்.என்.எப். நஸ்லா
க/கெப்பிடிய மு.ம.வி.
கலேவெல



எம்.ஐ. அஸ்மா
பு/பாத்திமா பெ.ம.வி.
புத்தளம்



நிஸார் நிப்லா
மனாறுல் ஹுதா பெ.அ.க.



என்.எப். அஸ்மா
கம்பளை ஸாஹிரா க.



எம்.டபிள்யூ.எப். சிபா
கே/தெஹி/தல்துவ மு.ம.வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Readers' Paradise

தலைநகரில் தலை நிமிர்ந்து நிற்கும் மாபெரும் புத்தக நிலையம்

# இஸ்லாமிக் புக் ஹவுஸ்

(வேறு கிளைகள் எதுவும் கிடையாது...) www.ibh.lk

**ஒரே கூரையின் கீழ்**
**தமிழ், ஆங்கிலம், சிங்களம், அரபு மொழிகளில்...**

ONLINE ORDERS & VPP ORDERS

- புனித அல்குர்ஆன் பிரதிகள்
- அகராதிகள்
- உளவியல் நூல்கள்
- தர்ஜுமாக்கள்
- கதைப் புத்தகங்கள்
- இஸ்லாமிய நூல்கள்
- அல் ஹதீஸ் தொகுப்புக்கள்
- வரலாற்று நூல்கள்
- இலக்கியத் தொகுப்புக்கள்
- இலக்கண நூல்கள்
- கவிதைத் தொகுப்புக்கள்
- சமையல் புத்தகங்கள்
- பாடசாலை துணை நூல்கள்
- பாடசாலை உபகரணங்கள்
- VCD/DVD



**7 Days Open**

You Ring 011 573 6098 We Bring


அறிவுக் களஞ்சியத்தின் நுழைவாயில்...

**Loyalty Card**
**Now Available**



புதிய நூல்களின் தகவல்கள் அறிய
f<space>ibhbooks என Type செய்து
40404 க்கு அனுப்புங்கள்.

IBH இன் இலவச விநியோகம்
தற்போது உங்கள் வீடுகளுக்கே...
(நகர எல்லைக்குள் மாத்திரம்)



**அதிகாலை 7:00 மணியிலிருந்து இரவு 9:00 மணி வரை உங்களுக்காக திறந்திருக்கும்**

**ISLAMIC BOOK HOUSE**
77, Dematagoda Road | Maradana | Colombo- 09
Web: www.ibh.lk | Phone: 0115 925935

வெளியீடு மொத்த விற்பனை பகுதி : 0115 736098, 0772518641
தபால் மூலம் நூல்களைப் பெற : 011 2684851
புனித அல்குர்ஆன் பிரதிகளை மொத்தமாக பெற : 0773171725

JPC - 0777 41 21 46


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org